
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஏப்ரல் 25 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 96 | Tuesday 25, April, 2023 | 12 பக்கங்கள் | 50/-




## வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வழிபாடு செய்வதை தடுக்க முடியாது

### அரச அதிகாரிகள் தடை விதிக்க முடியாது என நீதிமன்றம் உத்தரவு



வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் வழிபாட்டுக்கும் பூஜைகளுக்கும் எந்தவொரு அரச அதிகாரிகளும் தடை விதிக்க முடியாது என, வவுனியா மாவட்ட நீதிமன்றம் நேற்று (24) உத்தரவிட்டுள்ளது. எனினும், உடைக்கப்பட்ட ஆலய விக்கிரகங்களை இப்பொழுது வைக்க முடியாது என்பதுடன், அடுத்த தவணையில் இது தொடர்பாக ஆராயலாம் எனவும் தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய சிலை உடைப்பு தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு 04

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை வழங்க விசேட கருமபீடம்

### கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முதல் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட வசதிகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட கரும பீடமொன்று நேற்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்திக் குழுவின் பரிந்துரைக்கிணங்க இந்த விசேட கரும பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

நேற்று பிற்பகல் முதல் மேற்படி கரும பீடத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்தார்.

### ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல்

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பொறுப்புடன் செயற்படவில்லை

### நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ குற்றச்சாட்டு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆரம்பித்த காலம் முதல் அதற்கு நியமிக்கப்பட்ட எந்தவொரு ஆணையாளரும் தமது பொறுப்பை முறையாக நிறைவேற்றவில்லையென, நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

21ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு சமகாலத்தில் ஊழல் மோசடி எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் 04

### நாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள

# 20 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்த கொடுப்பனவு



### அரசின் நிவாரணமாக மூன்று வருடங்களுக்கு வழங்க திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 20 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். நான்கு பிரிவுகளின் கீழ் 20 இலட்சம் குடும்பங்களுக்கு குறிப்பிட்ட காலங்களுக்காக இந்த நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அந்த வகையில், மிக மோசமாக வறுமை நிலையிலுள்ள 4 இலட்சம் குடும்பங்களுக்கு மூன்று வருட காலங்களுக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் மாதாந்தம் நிவாரணம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், வறுமைக் கோட்டின் கீழ் இனங்காணப்பட்டுள்ள 8 இலட்சம் குடும்பங்களுக்கு மூன்று வருடங்களுக்கு மாதாந்தம் 8,500 ரூபா படி நிவாரணமும் நிவாரணத்துக்கு தகைமையுடையோராக கவனத்திற்கொள்ளப்பட்டுள்ள 4 இலட்சம் குடும்பங்களுக்கு எதிர்வரும் 04

## பாரிய ரயில் விபத்தை தடுத்தவருக்கு அமைச்சர் பந்துலவினால் பாராட்டு



அப்புத்தளை பிரதேசத்தில் ஏற்படவிருந்த ரயில் விபத்தொன்றை தடுத்து 600 மனித உயிர்களை பாதுகாப்பதற்கு தமது உயிரையும் துச்சமாக மதித்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தங்கமலை தோட்டத்தைச் சேர்ந்த எச்.எம்.விஜயரத்னவின் வீரச் செயலை பாராட்டி அமைச்சர் பந்துல குணவர்தன அவருக்கு ஒரு இலட்சம் ரூபாவை பரிசாக கையளித்த போது.




## SLPPயின் பொதுச்சபை கூட்டம் சட்டபூர்வமானது

கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு 03

## இலங்கைக்கு அருகே மீண்டும் நிலநடுக்கம் பதிவு

### மக்கள் அச்சமடையத் தேவையில்லை என அறிவிப்பு



ஹம்பாந்தோட்டை கடற்கரையோரத்திலிருந்து 25.8 கிலோமீற்றர் தொலைவில் சிறியளவிலான நிலநடுக்கமொன்று நேற்று (24) அதிகாலை பதிவாகியுள்ளதாக, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்தது. நேற்று 04

### நாட்டில் அதீத வெப்பநிலை நிலவுகிறது;

## சிறுவர்கள், கர்ப்பிணிகளுக்கு சுகாதார தரப்பு எச்சரிக்கை

### போதியளவு நீர் அருந்துமாறு வேண்டுகோள்



இலங்கையில் நிலவும் அதீத வெப்பநிலை காரணமாக சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள், நாள்பட்ட நோய்களுக்கு சிகிச்சை பெறுபவர்கள் ஆகியோர் நீரிழப்பு அபாயத்தில் உள்ளதாக, 04

### பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்திருந்த நிலையில்

## குவைத்திலிருந்து 52 பேர் நேற்று நாடு திரும்பினர்



தொழில் நிமித்தமாக குவைத்துக்குச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து நாடு திரும்ப முடியாமல் இருந்த 52 பேர், சர்வதேச கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நேற்று (24) அதிகாலை நாட்டை வந்தடைந்தனர். குவைத்தில் உள்ள இலங்கைத் 04

### கைது செய்யவோ, வாக்குமூலம் பெறவோ முடியாது;

## தப்புல TIDயில் முன்னிலையாக தேவையில்லை என உத்தரவு

### மேன்முறையீட்டு நீதிமன்று இடைக்காலத்தடை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை கைது செய்வது மற்றும் விசாரணை 04



போதை கலந்த மாவா பாக்கு பொட்டலங்கள்;


## மாணவர்களை இலக்கு வைத்து போதை மருந்துகள் விற்பனை

யாழில் இளைஞன் ஒருவன் கைது 03



## டயானாவை கைது செய்ய CIDக்கு பூரண அதிகாரம்!

நீதிமன்றை நாட வேண்டிய அவசியமில்லை 03



## நியூசிலாந்தில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம்

7.2 ரிக்டர் அளவில் பதிவு; சுனாமி எச்சரிக்கை 03

### 54 வருடங்களாக நீர்த்தேக்கத்தில் மூழ்கியிருந்த

## மவுஸாக்கலை ஸ்ரீசண்முகநாதர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு

### அபிஷேகம் நடத்தி அன்னதானமும் வழங்கிய மக்கள்



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நீரில் மூழ்கிய நிலையில் இருக்கும் மவுஸாக்கலை ஸ்ரீசண்முகநாதர் ஆலயத்தில் நேற்று மஸ்கெலியா புரவுன்லோ தோட்ட மக்களினால் அபிஷேகத்துடன் விசேட பூஜை வழிபாடுகள் 04

### அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக

## நாட்டை சீர்குலைக்கும் சதித் திட்டத்தில் சிலர்!

### கோட்டாவின் அரசு வீழ்ச்சிக்கும் அதுவே காரணம்



விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் நாட்டை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சீர்குலைக்கும் சதித்திட்டத்தின் ஓர் அங்கமாகவே கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் வீழ்ச்சி திட்டமிடப்பட்டதாக, ஸ்ரீலங்கா பொதுஜன 04


## இலாபமீட்டும் நிறுவனங்களை விற்பனை செய்ய வேண்டாம்

### விற்க அரசு திட்டமிடுவதாக சஜித் குற்றச்சாட்டு



இலாபம் ஈட்டாத அரச நிறுவனங்கள் சீர்திருத்தப்பட வேண்டிய போதிலும், இலாபம் ஈட்டும் நிறுவனங்களைக் கூட விற்பனை செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் திட்டங்களைத் தயாரித்து வருவதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் 04

## தேசிய கண் ஆஸ்பத்திரி நேற்று முதல் வழமைக்கு!



### சத்திரசிகிச்சைகள் மீண்டும் ஆரம்பமாகின

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய கண் வைத்தியசாலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த சத்திர சிகிச்சைகள் நேற்று (24) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை 04

## மாகாணசபை தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம்

### இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்க சுமந்திரன் MP தீர்மானம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றம் இன்று (25) கூடவுள்ளதுடன், மாகாணசபை தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான சட்டமூலம் இன்றையதினம் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 04

## நெடுந்தீவில் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரி போராட்டம்

### நெடுந்தீவு பிரதேச மக்களால் நேற்று முன்னெடுப்பு



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், நெடுந்தீவு பிரதேசத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு முன்பாக 04














# 'வசத் சிரிய – 2023' தமிழ், சிங்கள புத்தாண்டு விழா

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளர் கித்சிறி ராஜபக்ஷவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "கித்சிறி மேலா" புத்தாண்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் (23) டீன்ஸ் வீதிச் சந்தியில் நடைபெற்றன. இப்போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது. அத்தோடு 'வசத் சிரிய – 2023" தமிழ், சிங்கள புத்தாண்டு விழாவின் புத்தாண்டு அழகு ராணி, ஆணழகன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன .



அரசு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான

## தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்

எம்.ஏ.அமீனுல்லா



தேசிய அரசாங்க தோரணையில் அமைச்சுக்களை பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகளை அரசு தவிர்த்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை தயாரிக்கும் நடவடிக்கைகளில் அரசு முஸ்தீவு எடுக்க வேண்டும் எனவும் அதுவே காலத்தின் கட்டாயத் தேவையாக இருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் (22) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ந்துரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்...

பயங்கரவாதத் தடைச் சட்டம் 40 ஆண்டுகள் பழமையானது.கடந்த காலங்களில், இது எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து சர்வதேச சமூகத்தில் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து புதிய மசோதா கொண்டு வரப்பட்டால், எங்களுடன் நேர்மையாக விவாதித்து அதைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டம் ஊடகங்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவில்லை. எனவேதான் புதிய சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றார்.

## எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயத்தின் அமுத விழா நிகழ்வுகள் இன்று




இ/எம்பி/எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயத்தின் 80 வருட பூர்த்தியை முன்னிட்டு அமுத விழா பாடசாலை அதிபர் திருமதி குமுதினி மோகன்ராஜ் தலைமையில் இன்று (25) ஆம் திகதி நடைபெறுகிறது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் கௌரவ டிகிரி கொப்பேகடுவ பிரதம அதிதியாக கலந்து கொள்வதோடு கல்வி துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வானது காலை 10 மணிக்கு பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புடன் விஷேட விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு கொடியேற்ற நிகழ்வுகள் இடம்பெற்று கலாசார முறையில் மேடைக்கு அழைத்து வரப்படுவர்.

இசை, நடன கலாசார நிகழ்வுகளுடன் பாடசாலை முன்னாள் அதிபர்கள் கௌரவிப்பு, புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படுவர். எமது பாடசாலையில் கல்வி கற்று கல்வியற் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களும் கௌரவிக்கப்படுவதோடு பாடசாலையில் கல்வி கற்று அரச ஊழியர்களாக சேவையாற்றுவோர், பாடசாலை வளர்ச்சியில் அபரிமிதமான பங்களிப்பை நல்கும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்படுகின்றனர்.

## கம்பளை ஜீ.கே. டிவிசனிலும் நிலநடுக்கம்

கம்பளை நிருபர்

கம்பளை புப்புரஸ்ஸ ஜீ.கே. டிவிசனில் நேற்று முன்தினம் இரவு நில நடுக்கம் ஏற்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொழுவ பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜீ.கே. டிவிசனில் உள்ள வீடுகள் நேற்று முன்தினம் இரவு சுமார் 12.45 மணியளவில் திடீரென நிலம் மற்றும் கட்டில்கள், சில பொருட்கள் ஆடியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பூமி அதிரும் வகையில் மக்களுக்கு தென்பட்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்,

ஒரு வீட்டில் மதிலில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இவ்வளவு காலம் இது போன்ற சம்பவம் இந்த பகுதியில் ஏற்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## பலாலியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ். விசேட நிருபர்

பலாலி அன்ரனி புரம் பகுதியில் 26 கிலோ கேரளா கஞ்சாவுடன் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபருக்கு வயது 21 எனவும் அவர் அதே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை மர்மமான படகு ஒன்று கரை ஒதுங்கிய நிலையில் இந்த கஞ்சா கடற்படையின் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 80 இலட்சத்துக்கு அதிகம் என கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த கஞ்சா கடத்தலுடன் வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தொடர்புபட்டுள்ளார் எனவும், குறித்த இளைஞனுக்கு இரண்டு பியர்களை வாங்கிக் கொடுத்துவிட்டு பிரதான கஞ்சா கடத்தல் நபர் இந்த இளைஞனை அழைத்துச் சென்றுள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.



பேருவளை அப்ரார் கல்வி அமைப்பினால் மேற்கொள்ளப்படும் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் தனவந்தர்கள் மற்றும் பரோபகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் பேருவளை மருதானை மனாரா பீச் ஹோட்டலில் நடைபெற்றது. அமைப்பின் தலைவரும் முன்னாள் முஸ்லிம் விவாக பதிவாளருமான எம்.ஜே.எம் நிஸாம் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டதில் பாராளுமன்ற உறுப்பினரும் அப்ரார் கல்வி அமைப்பின் ஸ்தாபகருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், செயலாளரும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொருளாளருமான கலாநிதி ஏ. அஸ்வர் அஸாஹிம் (பீ.எச்.டி – அல் அஸ்ஹரி) உட்பட பலரும் கலந்து கொண்டனர்.
(படங்கள்: பேருவளை விசேட நிருபர்)

## மடத்தடி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கொடியேற்றம் இன்று

திருகோணமலை மடத்தடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த சித்திரா பௌர்ணமி பிரம்மோற்ஷவ விஞ்ஞாபனம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும் திருவிழாவில் 1 ஆம் திகதி திங்கட்கிழமை கற்பூரச்சட்டி திருவிழாவும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் இடம்பெறவுள்ளன.

சோ. இரவிச்சந்திரக் குருக்கள் ஆசியுடன் சிவஸ்ரீ சி.கு.சீதாராம கௌரி சங்கரக் குருக்கள் தலைமையில் ஆலய குருக்களான சிவஸ்ரீ ஆ.கோகிலராஜ சர்மா, சிவஸ்ரீ கி.கிருஷ்ணகுமார் சர்மா ஆகியோர் பங்களிப்புடன் உற்சவ கிரியைகள் இடம்பெறவுள்ளன.

நுவரெலியாவில்

## பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய சந்தேக நபர்கள் கைது

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை சமரசம் செய்ய தலையிட்ட பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய சந்தேக நபர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நுவரெலியா வசந்த கால திடலில் கடந்த (22) இரவு இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாகொல பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய ஒருவர் ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.ஏனைய நான்கு சந்தேக நபர்கள் 23 ஆம் திகதி மாலை கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாய்லாந்தின் பெங்கொக் நகரில் இம்முறை இடம் பெற்ற சிறந்த கட்டட வடிவமைப்பாளருக்கான விருதை பெற்றுக் கொண்ட (Global Architect building awards Bangkok edition 2023) பேருவளை சீனன் கோட்டையை சேர்ந்த அஸ்ஜத் ரஹ்மான் ஹுஸைன் சர்வதேச கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது,.... (படம்: பீ.எம் முக்தார்)



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 ஏப்ரல் 25 செவ்வாய்க்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



நெடுந்தீவு ஐவர் படுகொலைச் சம்பவம்

# கொலையாளி பயன்படுத்திய கத்தி, உடைகள் நேற்று மீட்பு

## பல கோணங்களில் பொலிஸார் விசாரணை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

யாழ்ப்பாணம், நெடுந்தீவு பிரதேசத்தில் ஐவர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் அப் படுகொலைக்கு பயன்படுத்தப் பட்டதாக கருதப்படும் கத்தியும் சந்தேகநபர் அணிந்த சாரமும் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை கைது செய்து இரண்டு தினங்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியை நேற்று முன்தினம் பொலிஸாருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் வழங்கியது.



இந்நிலையில், சந்தேகநபர் நேற்றையதினம் நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், சந்தேகநபரிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் படுகொலை இடம்பெற்ற வீட்டுக்கு பின்புறமாக இருந்த கிணற்றிலிருந்து கத்தியும் சாரமும் மீட்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுந்தீவு மாவலி படகு இறங்குதுறையை அண்டிய இடத்திலுள்ள வீடொன்றில் இந்த படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

04

## சுதுவெல்ல புதுவருட விழாவின் பரிசளிப்பு நிகழ்வில் ஜனாதிபதி



ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளர் கித்சிறி ராஜபக்ஷவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட 'கித்சிறி மேலா' புத்தாண்டு நிகழ்வு நேற்று முன்தினம் (23) டீன்ஸ் வீதிச் சந்தியில் நடைபெற்றது. இப்போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்

04

# காலாவதியான உணவுகளை விற்ற 8,231 வர்த்தகர்கள் கைது

காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களை நுகர்வோர் விவகார அதிகார சபையின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதன்போது பண்டிகைக் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் உணவுப் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகளை விற்பனை செய்த 8,231 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சில வர்த்தகர்கள் காலாவதியான கேக், பிஸ்கட் மற்றும் பிற பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

# தினகரன் முன்னாள் ஊழியர் கந்தப்பர் காலமானார்



தினகரன் பத்திரிகையின் ஒப்புநோக்குநர் பிரிவில் நீண்ட காலமாக தலைமை ஒப்புநோக்குநராக கடமையாற்றி ஓய்வு பெற்ற பொன்னுசாமி கந்தப்பர் அவர்கள் தமது 90 வயதில் நேற்றுக் காலை காலமானார்.

இவர் யாழ் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அமரர் பொன்னுசாமி கந்தப்பர் தினகரனில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் கொழும்பு, வெள்ளவத்தையில் உள்ள தனது மகளின் இல்லத்தில் வசித்து வந்தார். வயது மூப்பினால் உண்டான உடல் உபாதைகள் காரணமாக அவர் நேற்றுக் காலமானதாக அன்னாரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அன்னாரின் மகள் கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். அன்னாரின் மகன் கனடாவில் வசித்து வருகிறார்.

அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கல்கிசை பொதுமயானத்தில் 1.30 மணிக்கு தகனக் கிரியைகள் நடைபெறும்.

# ஜனாதிபதி நிதியத்துக்கு நிதி நன்கொடை

கிங்குசல ஆய்வுச் சங்கத்தின் ஸ்தாபக தலைவரும் ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளருமான சரத் சேனநாயக்க, தனது ஆவணப்படுத்தல் மற்றும் விரிவுரைகள் ஊடாக கிடைத்த வருமானத்திலிருந்து ஜனாதிபதி நிதியத்துக்கு வழங்குவதற்காக 2 மில்லியன் ரூபாவை நேற்று (24) ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளித்துள்ளார்.

இந்த நிதியை பெற்றுக்கொண்ட ஜனாதிபதியின் செயலாளர், இந்தத் தொகையை வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தில் அங்கவீனமடைந்தவர்களுக்கு செயற்கை கால்களை வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யவுள்ளதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர், ஜனாதிபதி அலுவலகத்தின் மேலதிகச் செயலாளர் டபிள்யூ. சரத் குமார, கிங்குசல ஆய்வுச் சங்கத்தின் செயலாளர் ஏ.பி.விக்ரமசிங்க, கிங்குச சங்கத்தின் முன்னாள் இளைஞர் அலுவல்கள் செயலாளர் சட்டத்தரணி ஜயதிலக்க முதுகம உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# மே 15க்கு முன் பாடசாலைகள் அனைத்துக்கும் பாடப்புத்தகங்கள்

## சீருடைகளும் அதே தினத்தில் விநியோகம்

எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னராக பாடசாலைகள் அனைத்துக்கும் பாடப் புத்தகங்களும் சீருடைகளும் விநியோகிக்கப்படும் என, கல்வி அமைச்சு தெரிவித்தது.

இதுவரையில் 80 வீதமான பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள பாடப் புத்தகங்கள் அனைத்தையும் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக, கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தது.

அத்துடன், தற்போது 85 வீதமான சீருடைகள் விநியேகிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள

04

# நியூசிலாந்தில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## 7.2 ரிக்டர் அளவில் பதிவு; சுனாமி எச்சரிக்கை

நியூசிலாந்தின் கெர்மடெக் தீவில் (Kermadec Island) நேற்று (24) சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதுடன், இது ரிக்டர் அளவுகோலில் 7.2ஆக பதிவாகியுள்ளது.

பூமிக்கு அடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து அமெரிக்க எச்சரிக்கை அமைப்பினால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்புகளோ, பொருட்களின் சேதமோ ஏற்பட்டதாக இதுவரையில் தகவல் வெளிவரவில்லை என, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# டயானாவை கைது செய்ய CIDக்கு பூரண அதிகாரம்!

## நீதிமன்றை நாட வேண்டிய அவசியமில்லை என தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் கீழ் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயை கைது செய்வதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கான அதிகாரம் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்துக்கு சட்டபூர்வமாக இருக்கின்றது. இந்நிலையில், நீதிமன்றத்தின் மூலம் அது தொடர்பான உத்தரவை பிறப்பிக்க முடியாதென, கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின் முறைப்பாட்டாளரான ஓஷல ஹேரத் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள தரப்புச் சட்டத்தரணிகள் மூலம் இதற்கு முன்னர் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு, போதியளவு சாட்சிகளை முன்வைத்துள்ள நிலையிலும், இராஜாங்க அமைச்சர் டயனா கமகே கைது செய்யப்படாமை தொடர்பிலேயே நீதவானினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில்,

04

# SLPPயின் பொதுச்சபை கூட்டம் சட்டபூர்வமானது

## கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்சபைக் கூட்டம் சட்டபூர்வமானது என, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த சந்திப்பில் மேலும் கருத்து வெளியிட்ட அவர், "பொதுச்சபைக் கூட்டம் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக கட்சியின் தவிசாளராக இருந்த ஜி.எல். பீரிஸுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. அத்துடன், உரிய நடைமுறைகளை பின்பற்றியே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது" என்றார்.

போதை கலந்த மாவா பாக்கு பொட்டலங்கள்

# மாணவர்களை இலக்கு வைத்து போதை மருந்துகள் விற்பனை

## யாழில் இளைஞன் ஒருவன் கைது

யாழ்ப்பாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்து போதை கலந்த மாவா பாக்குகளை விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் (23) மாலை கைது செய்த பொலிஸார், இவரிடமிருந்து தலா 100 ரூபாய் பெறுமதியான 250 மாவா போதை பாக்குப் பொட்டலங்களையும் கைப்பற்றினர். யாழ். ஊரெழு பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரையே கைது செய்ததாவும் யாழ்ப்பாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்து போதை கலந்த மாவா பாக்குகளை இவர் விற்பனை செய்து வந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேகநபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# உலக சந்தையில் தங்கத்தின் விலையில் திடீர் வீழ்ச்சி

## செட்டியார் தெருவில் ஏற்ற இறக்கத்துடன் விலைகள்

உலக சந்தையில் நேற்று (24) தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளதுடன்,

இதன்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1982.72 டொலர்களாக பதிவாகியுள்ளது.

இதற்கிடையில், நேற்று முன்தினம் (23) ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 2002 அமெரிக்க டொலர்களாக உலக சந்தையில் பதிவாகியுள்ளதாகவும், அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொழும்பு செட்டியார் தெருவில் தங்கத்தின் விலை சிறியளவான ஏற்ற, இறக்கங்களுடன் காணப்படுவதுடன், அந்த வகையில் செட்டியார் தெருவில் 24 கரட் தங்கப் பவுணின் விலை 176,000 ரூபாயாக காணப்படுகிறது.

இந்நிலையில், இம்மாத இறுதி வரை தங்கத்தின் விலையில் மாற்றமின்றி, சிறியளவான ஏற்ற, இறக்கங்களுடன் காணப்படும் என, செட்டியார்தெரு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறிருக்க, எதிர்வரும் மே மாதத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் வாரங்களின் பின்னர் உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரிக்குமாக இருந்தால், இலங்கையில் தங்கத்தின் விலை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

அந்த வகையில், உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 2020 டொலர்களுக்கு அதிகமாக அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும், தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நிலைமை ஏற்படுமாக இருந்தால், இலங்கையில் தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்கும் என, இலங்கை தங்க வியாபாரிகள் சங்கம் தெரிவித்தது.

# வன்முறையில் ஈடுபட்டதாக அருண் சித்தார்த் கைது!

## மே மாதம் 2 வரை விளக்கமறியல்



வன்முறைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யாழ். சிவில் சமூக நிலைய தலைவர் அருண் சித்தார்த்தை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை சிறையில் வைக்க யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். சிவில் சமூக நிலைய தலைவர் அருண் சித்தார்த் உள்ளிட்ட 5 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது கடந்த 20ஆம் திகதி இரவு அருண் சித்தார்த் தலைமையில் பெண்கள் அடங்கிய 7 பேர் கொண்ட வன்முறை கும்பல் தாக்குதல் மேற்கொண்டதுடன், ஹோட்டல் உரிமையாளராகிய தன்மீது சாணித் தண்ணீரால் ஊற்றியதாக, பொலிஸ் நிலையத்தில் ஹோட்டல் உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார், அருண் சித்தார்த், அவரது மனைவி உள்ளிட்ட ஆறு பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 6 பேரையும் விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில், அவர்களில் பால் ஊட்டும் தாயாராக இருந்தவருக்கு கடுமையான எச்சரிக்கையுடன் பிணை வழங்கிய நீதிமன்றம் ஏனைய ஐவரையும் எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

National Lotteries Board
2023.04.23
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5095 — ரூ. 12,622,792.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 2 7 7 5 0 9

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1550 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
வெற்றி இலக்கங்கள் 9 6 2 5 8 4

கொவிசெத — 3337 — ரூ. 98,007,557.84
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 05 13 32 38

தன நிதானய — 1125 — ரூ. 87,214,192.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 18 25 29 54

மெகா பவர் — 1443 — ரூ. 316,600,310.00
I 12 — 02 39 59 72
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

ராசி சய பலன் — சீட்டிழுப்பு இலக்கம் 404 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,744,117.20
வெற்றி இலக்கங்கள் 06 47 48 62

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக டொக்டர் ரீ.எஸ். ஆர்.ரீ.ஆர்.றஜாப் நியமிக்கப்பட்டுள்ளார்.அவர் வியாழக்கிழமை (20) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்ட போது...

படம் பாலமுனை விசேட நிருபர்





உடப்பு கிராமத்திலுள்ள பாரம்பரிய வழிபாட்டு மரபில் உள்ள சித்திரைச் செவ்வாய் முளைக் கொட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முளைப்பதித்தல் மூலம் ஆரம்பமானது. வியாழக்கிழமை(20)திகதி முளைக் கொட்டு இரண்டாவது நாளாக சின்னக்கொலனியில் உள்ள கருமுத்துமாரியம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்றது. கடைசி முளைக் கொட்டு எதிர்வரும் (26)திகதி உடப்பின் பல இடங்களில் இடம்பெற உள்ளது. இந்த உஷ்டமான காலத்தில் மழையை வேண்டியும், அம்மை நோய் கூடுதலாக மக்களுக்கு ஏற்படுவதாலும், அதனை நிவர்த்தி செய்ய மாரியம்மன் தெய்வத்திடம் வேண்டியும் இந்த நிகழ்வு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

(உடப்புகுறூப் நிருபர்)

## மவுஸ்சாக்கலை...

நடத்தப்பட்டதுடன், அன்னதானமும் வழங்கப்பட்டது.

கடந்த 1969ஆம் ஆண்டு இலங்கையின் மின்சாரத் தேவைக்காக 95 ஆயிரம் ஹெக்டேயர் தேயிலை தோட்டம் அடங்கிய காணியில் மவுஸ்சாக்கலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது. இதனால் பல ஆலயங்கள், பாடசாலைகள், தேயிலை தொழிற்சாலைகள் பௌத்த விகாரை, பள்ளிவாசல், கிறிஸ்தவ தேவாலயம், மூன்று நகரங்கள், இரண்டு சினிமா கொட்டகைகள், தேயிலை தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகள் நீரில் மூழ்கின.

கடந்த 1969ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டுவரை 54 வருடங்கள் நீரில் மூழ்கிய நிலையிலிருக்கும் இந்த ஆலயத்தில், வருடாந்தம் நீர்த்தேக்கத்தில் நீர் வற்றும் போது, பூஜைகள் மேற்கொள்ளப்பட்டு வழிபாடுகள் இடம்பெறுவது வழமையாகும். அவ்வாறே இந்த வருடமும் புரவுன்லோ தோட்ட மக்களினால் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## நாட்டை சீர்குலைக்கும்...

பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இந்த விடயத்தை தெரிவித்தார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"நாங்கள் வீழ்ச்சியடையவில்லை. எங்கள் வீழ்ச்சி திட்டமிடப்பட்ட ஒன்று. அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த அனைத்து தீர்மானங்களையும் நான் அங்கீகரிக்கவில்லை. ஆனாலும், அவர் நல்ல அர்த்தமுள்ள முடிவுகளையும் எடுத்திருந்தார்" என்றார்.

இதேவேளை, இயற்கை விவசாயத்தை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நல்ல நோக்கத்துடனேயே எடுத்திருந்தார்.

ஒரு விவசாயின் மகனாக, அவர் தனது முடிவுகளால் விவசாயிகளை சிரமத்துக்கு உள்ளாக்க விரும்பவில்லை எனவும், அவர் தெரிவித்தார். மேலும், கோட்டாபய ராஜபக்ஷவின் கோவிட் தடுப்பூசி திட்டமானது இரண்டரை ஆண்டுகளாக நாடு மூடப்பட்ட பின்னர் நிலவிய கடினமான காலக்கட்டத்தில் எடுக்கப்பட்ட ஒன்றாகும் எனவும், அவர் தெரிவித்தார்.

## இலாபமீட்டும்...

தொடர்பான விசேட அறிக்கையொன்றை வெளியிட்ட போதே, அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“கடைசி நேரத்தில் IMF திட்டத்துக்குச் சென்றதில், மக்கள் தரப்பிலிருந்து நாட்டுக்கான சிறந்த ஒப்பந்தத்தைப் பெற அரசாங்கம் தவறி விட்டது. இலாபம் ஈட்டாத பொது நிறுவனங்கள் சீர்திருத்தப்பட வேண்டும் என்பது மிகவும் தெளிவாக உள்ளது.

திவாலான நாட்டுக்கு நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை பராமரிக்கும் திறன் இல்லை. ஆனால், தற்போதைய நிலையில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் பலவீனமான கொள்கைகளால் நாட்டின் வளங்களை பல்வேறு சர்வதேச நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் உலக முதலாளிகளின் ஏல பூமியாக எமது நாடு மாறியுள்ளது.

இலாபம் ஈட்டும் நிறுவனங்களை விற்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. சிங்கப்பூர், மலேசியா போன்ற பல்வேறு மாதிரிகளை அரசாங்கம் பின்பற்றி எமது நாட்டிலேயே ஒரு மாதிரியைத் தயாரிக்க வேண்டும்.

இலாபம் இல்லாத நிறுவனங்களை இலாபம் ஈட்டுவதற்கும் இலாபகரமான நிறுவனங்களை அதிக இலாபம் ஈட்டும் நிறுவனங்களாகவும் மாற்ற வேண்டும்" என்றார்.

## தேசிய கண் ஆஸ்பத்திரி...

மேற்கொள்ளப்பட்ட சில நோயாளர்களுக்கு சிக்கல் நிலைமை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே, அந்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், நோயாளர்களுக்கு சிக்கல் நிலைமை ஏற்பட்டமைக்கு காரணம் அவர்கள் தமக்கான மருந்துகளை முறையாக எடுத்துக்கொள்ளாமையே என்பதை

சுட்டிக்காட்டியுள்ள அந்த வைத்தியசாலை வட்டாரங்கள், அதனையடுத்து நேற்று முதல் மீண்டும் சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

இதேவேளை, கிருமித் தொற்றுக் காரணமாக தேசிய கண் வைத்தியசாலையில் கடந்த சில தினங்களாக சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. கிருமித் தொற்றை நீக்கிய பின்னர் நேற்றையதினம் மீண்டும் சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், மருத்துவர் பிரசாத் கொழம்பகே தெரிவித்தார். முழுமையாக சம்பந்தப்பட்ட மருந்தை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக வேறு மருந்துகளை உபயோகிப்பதற்கும் சத்திர சிகிச்சைகளை பூரண பாதுகாப்புடன் முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## மாகாணசபை தேர்தல்...

தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டமூலமாக அது சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்டமூலம் தனிநபர் பிரேரணையாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

அதேவேளை, இம்முறை அமர்வுகளில் மூன்று தினங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பு தொடர்பான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக, பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

அதற்கிணங்க 26ஆம் 27ஆம் 28ஆம் திகதிகளில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பு தொடர்பான விவாதத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும், அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாராளுமன்ற சபை அமர்வுகள் இம்முறை இன்று முதல் 28ஆம் திகதி வரை நான்கு தினங்களுக்கு நடைபெறும் என்றும், அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## நெடுந்தீவில்....

நேற்று (24) அப்பிரதேச மக்களினால் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து, நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஊடாக நெடுந்தீவு பொலிஸாருக்கு மனுவொன்றையும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பை கவனத்திற்கொண்டு, ஒவ்வொரு சமூகத்தையும் உள்ளடக்கியதாக பொலிஸ் நிலையச் சட்டத்தின் ஊடாக விழிப்புணர்வுக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

"நெடுந்தீவில் பொது இடங்கள், இறங்குதுறை, மனித நடமாட்டங்கள் அதிகமாக உள்ள இடங்கள், சுற்றுலா தளங்கள் உள்ளிட்ட இடங்களில் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்பட வேண்டும்.

நெடுந்தீவிலுள்ள இடங்களையும் சுற்றுலாத் தளங்களையும் தினமும் ரோந்துப் பணியின் ஊடாக கண்காணிப்பதற்கு பொலிஸ் நிலையத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வெளியிடங்களிலிருந்து வருகை தந்து நெடுந்தீவில் உள்ள விடுதிகளில் தங்குபவர்களை ஆள் அடையாளத்துக்கு உட்படுத்துவதற்கு விடுதி உரிமையாளர்களுடன் இணைந்து நெடுந்தீவு பொலிஸ் நிலையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெடுந்தீவுக்கு உள் வரும் வெளிச் செல்லும் மக்களை சிரமத்துக்கு உட்படுத்தாது, அவர்கள் தொடர்பான தரவுகளை நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, அதிவிரைவாக இறங்குதுறையில் வைத்து சேமித்துக் கொள்ளும் நடைமுறையை கொண்டுவர வேண்டும்" என அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தப்புல TIDயில்...

செய்வதை தடுக்கும் வகையில் பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (24) தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு தேவையான வாக்குமூலத்தை பெற்றுக்கொள்வதற்காக பயங்கரவாத விசாரணை பிரிவால், தம்மை ஆஜராகுமாறு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு தொடர்பில் முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நேற்று பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு மீண்டும் அழைக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்தே, முன்னாள் சட்டமா அதிபர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அது தொடர்பில் ரிட் மனுவை தாக்கல் செய்தார்.

கடந்த 19ஆம் 21ஆம் திகதிகளில் பயங்கரவாத விசாரணைப்பிரிவு, முன்னாள் சட்டமா அதிபரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக அழைப்பு விடுத்திருந்த போதும், அவர் ஆஜராகவில்லை. எனினும், அவருக்கு பதிலாக சட்டத்தரணிகளூடாக முன்னாள் சட்டமா அதிபர் விடயங்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தார். இந்நிலையிலேயே மீண்டும் நேற்றையதினம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக அவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

## வெடுக்குநாறிமலை...

விசாரணையின் போதே, இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதன் போது, ஆலய நிர்வாகம் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகினார்.

இதேவேளை, தொல்லியல் திணைக்களத்தினதும் வனவளத் திணைக்களத்தினதும் பிரதிநிதிகள் நேற்றைய வழக்கில் முன்னிலையாகாமையினால், அவர்கள் அடுத்த வழக்கு விசாரணையில் முன்னிலையாகும் வரை, ஆலயத்துக்கு வாகனங்களில் செல்வதை தவிர்க்க வேண்டும் என, பொலிஸார் கேட்டுக்கொண்டனர். தொல்லியல் திணைக்கள பிரதிநிதிகள் நேற்றைய வழக்கு விசாரணையில் முன்னிலையாகமையினால், உடைக்கப்பட்ட சிலையை மீள வைப்பது தொடர்பில் நீதிமன்றம் எந்தவித உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. அடுத்த வழக்கில் தொல்லியல் திணைக்களத்தினரின் கருத்தை அறிந்து, பொருத்தமான உத்தரவை பிறப்பிப்பதாக, நீதிமன்றம் தெரிவித்தது. இந்நிலையில், இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 27ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இலஞ்ச ஊழல்...

மூலம் நாட்டில் பெருமளவிலான ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார். மல்வத்து மகாநாயக்க தேரர் திப்படுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து உரையாடிய போதே, இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"தற்போது நடைமுறையிலுள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு போதியளவு அதிகாரம் கிடையாது என்றும் ஊழல் மோசடி எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்த நிலையை இல்லாதொழிக்க முடியும். 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு பின்னர், ஆணைக்குழுவுக்கு அரசியல் நியமனங்களை வழங்க முடியாது. அந்த வகையில், அரசியலமைப்பு சபையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டே அதற்கான நியமனங்களை வழங்க முடியும். சுயாதீன நபர்களை பணிப்பாளர் நாயகம் மற்றும் ஆணையாளர்களாக நியமிப்பதன் மூலம் ஆணைக் குழுவை பலப்படுத்த முடியும்" என்றார்.

## சிறுவர்கள், கர்ப்பிணிகளுக்கு...

இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர், வைத்தியர் வின்யா ஆரியரத்ன தெரிவித்தார்.

ஆகையினால், ஆபத்திலுள்ளவர்கள் சூரிய ஒளியில் நடமாடுவதை கட்டுப்படுத்த வேண்டுமென்பதுடன், நீரிழப்பைத் தவிர்க்க போதியளவு நீர் அருந்த வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார். வயது வந்த ஒருவர் குறைந்தது 2.5 லீற்றர் நீர் அருந்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களை வெளிப்புற நடவடிக்கைகளிலிருந்து குறிப்பாக, அத்தியாவசியமற்ற வெளிப்புற செயல்பாடுகளிலிருந்து விலக்கி வைக்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

சிறுவர்கள் வீட்டுக்குள் அல்லது நிழலில் விளையாடுவதற்கு இடம் வழங்கப்பட வேண்டும். வெளியில் செல்லும்போது பாதுகாப்பு தொப்பிகளை அணியுமாறு சிறுவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தங்கள் ஊழியர்களின் தேவைகளை தொழில் வழங்குநர்கள் கவனிக்க வேண்டும். தேவைப்பட்டால் வேலை நேர அட்டவணைகளை மாற்ற வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை அடுத்த சில நாட்களுக்கு தொடருமென, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இலங்கை மக்களுக்கு சேவையாற்றியமை மகிழ்ச்சியை தருகிறது

கோப்பாய் குறூப் நிருபர்



ஜெர்மனியில் பல்வேறு பிரச்சினைகளுடன் வருகைதந்தவர்களில் இரண்டு இலட்சம் இலங்கை மக்களுக்கு எமது சட்ட நிறுவனம் சேவை வழங்கியமையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன் என முட்மன் கோறன்பிளோ சட்ட நிறுவனத்தின் சட்டத்தரணி கோறன்பிளோ தெரிவித்தார். நேற்று திங்கட்கிழமை யாழ். தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதோ அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,,

எமது ஜெர்மன் சட்ட நிறுவனமானது தென்னாசியாவின் கிளையினை அண்மையில் கொழும்பில் திறந்து வைத்த நிலையில் அதன் தொடர்ச்சியாக வட மாகாணத்துக்கான கிளையினை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்துள்ளோம். 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நமது சட்ட நிறுவனமானது இலங்கையில் இருந்து வந்த பலரின் குடியேற்றத்துக்கான இலவச ஆலோசனைகளையும் தேவை ஏற்படின் குறைந்த கட்டணத்தில் நீதிமன்றத்தில் வழக்குகளையும் தாக்கல் செய்து வெற்றி கண்டது. எமது நிறுவனம் இலங்கையில் இருந்து ஜேர்மனி நாட்டுக்குள் பிரவேசித்தவர்களில் சுமார் 2 இலட்சம் பேரின் வழக்குகளை எமது நிறுவனமே கையாண்டது.

எமது நிறுவனத்தின் பணி புரியும் சட்டத்தரணி எம் டி எஸ் இராமச்சந்திரன் இலங்கையைச் சேர்ந்தவர். இங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நன்கு அறிந்தவராக இருப்பது வழக்குகளை இலகுவாக கொண்டு செல்வதற்கு உதவியாக இருந்து வருகிறது.

## கொலையாளி பயன்படுத்திய...

03ஆம் பக்கத் தொடர்

இதன்போது 5 பேர் வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டதுடன், 100 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் படுகாயங்களுடன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாடொன்றில் கொலை முயற்சியில் ஈடுபட்டு வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நிலையில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 51 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து பெருந்தொகை தங்க நகைகள் மற்றும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், விசாரணைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸார் தெரிவித்தனர்.

## சுதுவெல்ல புதுவருட ...

03ஆம் பக்கத் தொடர்

தலைமையில் நடைபெற்றது. இதன்போது,

புத்தாண்டு அழகிகளாக தெரிவு செய்யப்பட்டு முதலாம் இடத்தை பெற்ற ஹஷினி சமுதிகா, இரண்டாம் இடத்தை பெற்ற செனுகி ரதீஷா, மூன்றாம் இடத்தை பெற்ற லக்ஷிகா இஷாரா ஆகியோர் ஜனாதிபதியிடமிருந்து பரிசுகளை பெற்றுக்கொண்டனர்.

சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், ஸ்ரீதர்மாலோக தயா மகா விகாரைக்கு அருகில் கித்சிறி ராஜபக்ஷவினால் நிர்மாணிக்கப்பட்ட கடைத்தொகுதிக்கான காணியை அன்பளிப்புச் செய்த மொஹமட் ஸ்மையிலுக்கு 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடொன்றும் 30 இலட்சம் ரூபா பெறுமதியான கடையொன்றின் உரிமமும் 5 இலட்சம் ரூபா பணமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கி வைக்கப்பட்டது. இதேவேளை, நாட்டில் சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்திய மாசற்ற தலைவர் என்ற வகையில் 'ஜனதா பிரசாதாபிமானி' எனும் விருது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கித்சிறி ராஜபக்ஷவினால் வழங்கி வைக்கப்பட்டது.

## மே 15க்கு...

03ஆம் பக்கத் தொடர்

சீருடைகளை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், கல்வி அமைச்சு மேலும் தெரிவித்தது.

## டயானாவை...

03ஆம் பக்கத் தொடர்

குற்ற வழக்கு விதிகளில் 32ஆவது சரத்தின் கீழ்

நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கிணங்க டயனா கமகேயை கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென, நீதிமன்றத்தை அந்தச் சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பான தீர்ப்பை நேற்று வழங்கிய போதே பிரதம மஜிஸ்திரேட் நீதவான், இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குற்ற வழக்கு சட்டத்தின் கீழ் அந்த குற்றத்தடுப்பு நிறுவன அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ளதாகவும் தெரிவித்தார். , இந்த வழக்கின் மீதான விசாரணை மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 20 இலட்சம் குடும்பங்களுக்கு...

வருடம் மார்ச் மாதம்வரை மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா நிவாரணத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், வறுமை நிலைத் தரப்படுத்தலின் கீழ் 4 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதிவரை மாதாந்தம் 2,500 ரூபா நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிவாரணங்கள் வழங்கப்படும் காலம் மற்றும் அதற்குள் உள்ளடக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை அதிகரிப்பது தொடர்பிலான அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உள்ளதாகவும் இக்காலங்களுக்குள் அவர்களை பொருளாதாரத்தில் பலப்படுத்துவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு உலக வங்கியின் அறிக்கைக்கு இணங்க எமது நாட்டு அரசாங்கத்தின் நலன்புரி திட்டத்தின் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வோரில் 12 வீதமானோர் அதிக வருமானம் பெறுவோர் என்பது தெளிவாகிறது என்றும் அதனை தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு அருகே...

அதிகாலை 12.45 மணியளவில் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோலில் 4.4ஆக பதிவாகியுள்ளது. எவ்வாறாயினும், இந்த நிலநடுக்கம் காரணமாக இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தல் இல்லை எனத் தெரிவித்த புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம், இது தொடர்பாக பொதுமக்கள் வீணாக அச்சமடையத் தேவையில்லை எனவும் தெரிவித்தது. அண்மைக் காலமாக இலங்கையின் சில பகுதிகளில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குவைத்திலிருந்து...

தூதரகத்தில் பதிவு செய்யப்பட்டு இவ்வாறு நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட ஐந்தாவது குழு இதுவாகும் என்பதுடன், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்குச் சொந்தமான UL 230 எனும் விமானத்தில் அவர்கள் வந்தனர். அவர்களில் 17 ஆண்களும் 35 பெண்களும் இருந்ததாக, விமான நிலைய செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# முதிர்ந்த விசுவாசமும் நிறைந்த இறையருளும்






## நற்செய்தி கூறும் வாழ்க்கைப் பாதை

நற்செய்தி தெரிவிப்பது மனிதன் தன் அகங்காரம், தீயவைகள் அனைத்தும் நீங்கி தெய்வவாழ்வை அடைதல் வேண்டும் என்பதே.அதற்கு நமக்கு வேண்டியது நன்கு அறிவு முதிர்ந்த விசுவாசம்.

விசுவாசத்துடன் நாம் சரணாகதி அடைய வேண்டியது இறைவனிடமே. அத்தகைய சரணாகதி அனைத்து மாந்தர்களுக்கும் அருள்புரிய காத்திருக்கிறது.

லூக்கா நற்செய்தியில் வெகு தெளிவாக மக்கள் இயேசுவிடம் விசுவாசம் வைத்து, அவரிடம் அருளை பெறுகின்றமை கூறப் பட்டுள்ளது.

நற்செய்தியில் இயேசு மூன்று வழிகளில் நம்பிக்கை கொள்பவருக்கு அருளுவதைப் பார்க்கலாம்.

முதலாவதாக

குரு தன் கரத்தால் சீடனைத் தொட்டு மெய்யுணர்வை உணர்த்துவது, வியாதியைக் குணப்படுத்துவது இது ஸ்பரிச தீட்சையாகும். இங்கே குருவைத் தொட்டு விமோசனம் பெறுவதைப் பார்த்தால்,பன்னிரண்டு ஆண்டு இரத்தப் போக்கினால் வருந்திய பெண், இயேசுவின் பின்னால் வந்து அவரது மேலாடையின் ஓரத்தைத் தொட்டார். உடனே அவளது இரத்தப் போக்கு நின்றுவிட்டது.இயேசு என்னைத் தொட்டவர் யார் என்று கேட்க, அவள் அவர்முன் விழுந்து தொட்ட காரணத்தையும் பிணி நீங்கியதையும் மக்கள் முன்னிலையில் அறிவித்தார் (லூக்கா 6:4343)

இயேசு அவளிடம் “உன் நம்பிக்கை உன்னை நலமாக்கியது. அமைதியுடன் போ” என்றார்.

இயேசு தொட்டாலும், இயேசுவைத் தொட்டாலும் ஸ்பரிசம் பட்டவுடனேயே பிணி நீங்கிவிடும். அமைதியும் வந்துவிடும்.

இரண்டாவதாக

லூக்கா காட்டும் காட்சியானது (லூக்கா 7:3738,48)

பாவியான பெண் ஒருத்தி, பரிசேயருடைய வீட்டில் விருந்துண்ண வரும் இயேசு, அங்கே பந்தியில் அமர்ந்ததும் இயேசுவுக்குப் பின்னால் கால்மாட்டில் வந்து அழுதுகொண்டே நின்றார்.

அவள் அழுதாள்.அவரது

திருவடியை கண்ணீரால் நனைத்தாள்.

கூந்தலால் துடைத்தாள். அதனைத்

தொடர்ந்து முத்தமிட்டாள்.

காலடிகளில் நறுமணத்தைலம் பூசினாள்.

ஒவ்வொரு செயலும் தீர்மானமாகவும் முழு நம்பிக்தையோடும் விசுவாசத்தோடும் செய்யப்பட்டதை லூக்கா முழுமையாகத் தெரிவிக்கின்றார்.

ஆன்மிக உலகில் பரம்பொருளுக்குச் சில பொருட்களை அடையாளமாகக் கூறுவதுண்டு.


கூந்தல் ஞானத்துக்குக் குறியீடு. அதே போல் திருவடி திருவருளுக்குக் குறியீடு. இறைவனின் திருவருளைப் பெறுதலை திருவடி அடைதல், திருவடியை தலைமேல் கொள்ளுதல் என்பதை மரபாகக் கூறுகின்றோம்.

திருவடிக்கு ஒளி உண்டு. அது பக்தன் மட்டுமே கண்டு உணரக் கூடிய ஒன்று.

இயேசு அப்பெண்ணைப் பார்த்து “உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்றார். பின் உமது நம்பிக்கை உம்மை மீட்டது அமைதியுடன் செல்க என்றார்.

திருவடி தீட்சையைப் பெண்ணொருத்தி பெற்றாள். திருப்பாதங்கள் பெருஞ்சிறப்பைக் கொண்டவையாகப் பார்க்கின்றோம்.

பாதத்திற்கு எந்த வேறுபாடும் இல்லை, அடைந்தவர்களுக்கு அடைக்கலம் தருவது ஒன்றைத் தவிர வேறெதானாலும் அடையாளம் காணமுடியாதவை பாதங்கள்.



மூன்றாவதாக

குருவின் பார்வையிலேயே கிடைக்கும் அருள். இதன் படி, பார்வை மூலமாகவே மெய்ஞ்ஞானம் பெறலாம். இது நயனதீட்சை (அருட் பார்வையால் சீடனுக்கு ஞானம் உண்டாக்குதல்) என்பர்.

மீண்டும் லூக்கா நற்செய்தியைப் பார்த்தால் (லூக்கா 22:5562) பேதுரு தலைமைக் குருவின் வீட்டின் முற்றத்தில் அமர்ந்திருந்தபொழுது மூன்றுமுறை இயேசுவை எனக்குத் தெரியாது என்று மறுதலித்தார்.

அப்பொழுது ஆண்டவர் திரும்பிப் பேதுருவை கூர்ந்து நோக்கினார். சேவல் கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய் என்று கூறியதை பேதுரு நினைவு கூர்ந்து, வெளியே சென்று மனம் நொந்து அழுதார்.

மனத்தின் சாளரங்கள் கண்கள். மனம் உணர்வதை வார்த்தைகளின் உதவியின்றியே பேசவல்லவை கண்கள். மொழி இல்லாமல் மொழி பேசும் வல்லமை, கண்களுக்கு மட்டுமே உண்டு.

இயேசுவின் பார்வையே பேதுருவிடம் பேசிவிட்டன. மனம் நொந்து போனார் பேதுரு. நயனத் தீட்சையைப் பெற்றவர் அவர்.

மேற்கண்ட காட்சிகளுக்கு மிகவும் முக்கியமானதை கட்டாயம் கடைப்பிடித்தால் தான் அருளைப் பெற முடியும். அதையும் லூக்கா கூறுகின்றார்.

உன் முழு இதயத்தோடும்
முழு உள்ளத்தோடும்.
முழு ஆற்றலோமும்
முழு மனதோடும்
கடவுளாகிய ஆண்டவரை அன்பு செய்.

அவ்வாறு நாமும் ஆண்டவரை அன்பு செய்வோம். அவரது முழுமையான அருளைப் பெறுவோம்.

**அல்போன்ஸ்**

## நுவரெலியா புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய பரிசுத்த வார நிகழ்வுகள்









நுவரெலியா புனித பிரான்சிஸ் சேவியர் ஆலயத்தில் இடம்பெற்ற பரிசுத்த வார நிகழ்வுகளின் சில காட்சிகள். புனித வெள்ளியன்று நகரில் பவனியாக இடம்பெற்ற சிலுவைப் பாதை தியானம், சிலுவையிலிருந்து இயேசு இறக்கப்படும் காட்சி மற்றும் புனித வியாழனில் பாதம் கழுவும் சடங்கு அத்துடன் பங்கேற்ற விசுவாசிகளையும் படங்களில் காணலாம். பங்குத் தந்தையின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் அருட்தந்தை அந்தனி ஜஸ்டின் அடிகளார் உட்பட அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் அருட்சகோதரர்களும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

பட உதவி: செல்வராணி ஒகஸ்டின்

## உயிர்த்த இயேசுவினுடனான சந்திப்பும் எம்மாவுஸ் சீடர்களின் மனநிலையும்

பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறை இந்த வாரம் சிறப்பிக்கின்றோம். ஞாயிறுவாசகங்கள், தோல்வியின் விளிம்பில் இருக்கும் மனிதருக்கு நம்பிக்கை தருவதாக அமைகின்றன.

‘நாம் கண்ட கனவெல்லாம் வீணாகிவிட்டதே! நமக்கு மீட்பளிக்க வந்த உண்மை மெசியாவிற்கு சமாதி கட்டிவிட்டனரே யூதர்கள்!’ என்று விரக்தியிலும், தோல்வியின் பயத்திலும் தங்களின் சொந்த ஊரான எம்மாவு சென்றுகொண்டிருந்த சீடர்களுடன் உடன் பயணித்து அவர்களுக்கு நம்பிக்கை தருகின்றார் உயிர்த்த ஆண்டவர்.

லூக்கா நற்செய்தியின் இறுதியில் இடம்பெறும் இந்த எம்மாவு பயணம் நமது தனிப்பட்ட வாழ்விற்கு நாம் பெறவேண்டிய அடையாளமாகத் திகழ்கின்றது. நமது வாழ்க்கையின் நம்பிக்கை பாதையில் நமது கனவுகள், உள்ளத்தின் ஆழமான நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகளை அடைய பலவீனங்கள் மற்றும் துன்பங்களிலிருந்து நாம் மீண்டு வர வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

நமது வாழ்க்கைப் பயணத்தில், தோல்விகளினாலும் கடந்தகால அனுபவங்களினாலும் பல நேரங்களில் சிறைக்குள் அடைபட்டு இருப்பது போல நாம் முடங்கிப் போகின்றோம். இப்படிப்பட்டத் தருணங்களில் நாம் தனியாக இல்லை, மாறாக, உயிர்த்த இயேசு நம்முடன் பயணிக்கின்றார் என்பதை எம்மாவு சீடர்களின் பயணம் நமக்கு வெளிப்படுத்துகின்றது.

இயேசு நம்முடன் பயணித்து கண்களைத் திறக்கச் செய்து, உள்ளத்தைப் பற்றி எரியச் செய்து, நம்மோடும் பிறரோடும் அவரோடும் திருஅவையோடும் ஒப்புரவாகச் செய்கின்றார் என்ற உன்னதமான எண்ணங்களை அவர்களின் பயண அனுபவங்கள் நமக்குத் தருகின்றன.

### எம்மாவு சீடர்களின் மனநிலை

இயேசுவின் சீடர் குழுவை அடையாளப்படுத்தும் எம்மாவு சீடர்கள் இருவரும் இயேசுவின் மேல் தாங்கள் வைத்த நம்பிக்கை நிறைவேறாமல் போனது பற்றி குறைகூறிக் கொண்டு செல்கின்றனர்.

அச்சீடர்கள் இருவரும் நிகழ்வு நடந்த இடத்தை விட்டு அகன்று, அடைக்கலம் தேடி எம்மாவு நோக்கித் தப்பிச் செல்ல நினைத்தனர்.

துன்பம் வரும்போது அதை விட்டுத் தப்பி ஓட நினைப்பது மிக மோசமானது. மாறாக, துன்பத்தை எதிர்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். இயேசுவின் இறப்புக்குப் பின் துன்பத்தினால் துவண்டவர்களாய்த் தங்களின் எதிர்பார்ப்பு அனைத்தையும் இயேசுவின் மேல் வைத்து, அவரது கொடூர இறப்பிற்கு பின் ஏமாற்றமடைந்தவர்களாய், இயல்பு வாழ்க்கையை வாழ எம்மாவு நோக்கி திரும்புகின்றனர் அவர்கள்.

இதைத்தான் பேதுருவும் ஏனைய சீடர்களும் செய்தனர். அப்போது சீமோன் பேதுரு அவர்களிடம், “நான் மீன்பிடிக்கப் போகிறேன்” என்றார். அவர்கள், “நாங்களும் உம்மோடு வருகிறோம்” என்று போய்ப் படகில் ஏறினார்கள் ( யோவான் 21:3) என்று யோவான் நற்செய்தியாளர் பதிவு செய்கின்றார்.

மெசியாவின் பாடுகள் வழியாக அவர்கள் பெற்ற துன்ப அனுபவங்களை மனதில் சுமந்து குற்றவாளிகள் போல கவலையுடன் பயணம் செய்யும் எம்மாவு சீடர்களின் முகங்கள் வருத்தமாய் சோகமாய் இருக்கின்றன. சீடர்களின் மகிழ்வான எதிர்பார்ப்புகள் வீணாகிவிட்டன, உறுதியான நம்பிக்கை சிதைந்துவிட்டன, கனவுகள் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் உண்டாக்கிவிட்டன என்று அர்த்தம் பெறுகின்றது.



தீயோனிடமிருந்து வரும் சோதனைகள், துன்பங்கள் ஆகியவை, நமது ஆன்மிகப் பயணத்தைப் பாதித்து, இத்துன்பங்களிலிருந்து ஒருபோதும் மீண்டு வரமுடியாது, எதுவும் செய்ய முடியாது என்ற நம்பிக்கையற்ற தன்மையை நம்மில் வளர்க்கின்றன. இயேசு கைதுசெய்யப்பட்டபோது சீடர்கள் அனைவரும் இத்தகைய மனநிலையில்தான் இருந்தனர்.

### உயிர்த்த இயேசு தரும் நம்பிக்கை

நமது ஏமாற்றம், துயரம், தீயோனின் தூண்டுதலால் செய்யும் பாவம், போன்றவற்றால் நம்முடைய அருள்வாழ்வின் நீர் வற்றிப் போய், எதுவும் செய்ய முடியாது எனும் நிலையிலும் உயிர்த்த இயேசு நம்மோடு உடன் நடக்கின்றார். எவ்வாறு தடம்புரண்டு வருத்தமுற்று, தெளிவற்ற பாதையை நோக்கி பயணம் மேற்கொண்ட எம்மாவு சீடர்களின் பயணத்தில் உயிர்த்த இயேசு துணை நடந்தாரோ அதுபோல, நமது பாதையிலும் அவர் உடன் நடக்கின்றார்.

உற்சாகமூட்டும் வார்த்தைகளை, எளிமையான ஆறுதல் வார்த்தைகளை அவர் தரவில்லை, மாறாக, தனது இறப்பின் மறையுண்மையை உயிர்ப்பின் ஆற்றலை, மறை நூல் வழியாக வெளிப்படுத்தி, அவர்கள் பெற்ற அனுபவத்திற்கும் நிகழ்விற்கும் புதிய ஒளி கொடுக்கின்றார். அனைத்தையும் புதிதாகக் காண, வாழ்விற்கும் கண்களுக்கும் ஒளி கொடுக்கின்றார். இறுதியாக அப்பம் பிடுவதன் வழியாக, கடவுளின் அன்பிற்கிணங்க நண்பர்களுக்காக உயிரை அர்ப்பணித்த தன்னை யாரென்று வெளிப்படுத்தி தோல்வியிலிருந்து நம்பிக்கை நோக்கிய மகிழ்வின் பயணத்தை தொடங்க, நம் ஒவ்வொருவருக்கும் திருஅவைக்கும் உதவுகின்றார்.

நாம் சவால்களைச் சந்திக்கும் வரை சகஜமாக நல்லவர்களாக இருக்கிறோம். ஆனால் அவைகளைச் சந்திக்கும் போதுதான், நமக்குள்ளே இருக்கும் உண்மையான குணங்களும், எண்ணங்களும், மனப்பான்மையும் வெளிப்படுகின்றன. மேலும், “நமது வாழ்வின் பாதையில் வரும் சவால்களும், வேதனைகளும், சோதனைகளும், துயரங்களும், தோல்விகளும் நம்மை நாமே அறிந்துகொள்ளவதற்கே. இதனை நன்கு உணர்ந்துகொண்டால்தான் நம்மையே திருத்திக்கொண்டு நமது வாழ்வின் பாதையை மாற்றிக்கொள்ள முடியும். இல்லையெனில் தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைக்காமலேயே போய்விடும்!”

சோதனைகள், இழப்புகள் மற்றும் தோல்விகளின் பிடியில் நாம் சிக்கித்தவிக்கும் வேளை, அவற்றிலிருந்து தப்பி ஓட நினைப்பதைவிட, அவற்றை மனவுறுதியுடன் எதிர்த்து நின்று போராடி வெற்றிபெறக் கற்றுக்கொள்வோம். வாழ்வில் நாம் சந்திக்கும் தோல்விகளை நன்கு உற்றுப்பார்த்தால் அதில் துணிச்சல் ஒளிந்திருப்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். அந்தத் துணிச்சலை நாம் ஆடையாக அணியும்போது அது வெற்றி என்னும் கிரீடத்தால் நம்மை அலங்கரிக்கும். இதனை உணர்ந்தவர்களாக உயிர்த்த ஆண்டவரின் துணைகொண்டு நமது வாழ்வை முன்னோக்கி நகர்த்துவோம். ஒவ்வொரு நாளும் நாம் மேற்கொள்ளும் உயிர்த்த இயேசுவினுடனான சந்திப்பு நம் வாழ்வை மாற்றிப்போட நம்மையே நாம் அனுமதிப்போம்.

**அருட்பணி சூசைமாணிக்கம்**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை

பெரியாரைப் பேணாது ஒழுகிற் பெரியாரால்
பேரா இடும்பை தரும்

பெரியோர்களை மதிக்காமல் நடந்து கொண்டால் நீங்காத பெருந்துன்பத்தை அடைய நேரிடும்.

# கலைந்து போன விம்பங்கள்!

அரசுக்கு எதிரான போராட்டங்களின் தீவிரம் படிப்படியாகத் தணிந்து செல்கின்றது. 'இன்றைய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் நோக்கிலான போராட்டத்தினால் ஒட்டு மொத்த தேசமே முடங்கப் போகின்றது' என்று எதிரணியினர் ஊடகங்களில் அடிக்கடி செய்திகளை வெளியிடுகின்றனர். ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதற்கு ஒருவார காலம் இருக்கையிலேயே ஊடகங்களிலும் சமூகவலைத்தளங்களிலும் அதுதொடர்பான பிரசாரங்கள் பரபரப்படைகின்றன. மக்களும் ஒருவித பதற்றத்துக்கு உள்ளாகின்றனர்.

ஆனால் அச்செய்திகளுக்கு ஏற்றாற் போல களேபரங்களைக் காண முடியவில்லை. ஆர்ப்பாட்டங்களுக்கு வருகின்ற மக்களின் எண்ணிக்கை இப்போதெல்லாம் முன்னரைப் போல கிடையாது. குறைந்தளவானோரே ஆர்ப்பாட்டங்களுக்காக வருகை தருகின்றனர். அவர்கள் வீதியோரம் நின்று கூக்குரலிடுகின்றனர். அரசாங்கக் கட்டடங்களை நோக்கி அவர்கள் செல்லத் தொடங்கும் போது, பொலிசார் பாதுகாப்பு கருதி ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்துகின்றனர். அத்துடன் ஆர்ப்பாட்டமே பிசுபிசுத்துப் போகின்றது.

இதுதான் இன்றைய நிலைமை. உண்மையில் கூறுவதானால் எதிரணி அரசியல் கட்சிகள் மீது மக்களுக்கு இப்போது நம்பிக்கை கிடையாது. எதிரணியினர் மேடைகளில் கூச்சலிடுவதற்கு மாத்திரமே பொருத்தமானவர்கள் என்றுதான் மக்கள் பேசிக் கொள்கின்றனர். எதிரணியினர் எவ்வளவுதான் சிரமப்பட்டு ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்தாலும், ஆரம்பத்தைப் போன்று இப்போதெல்லாம் மக்கள் ஒன்றுதிரளாதது ஏன் என்பதுதான் பிரதான வினா!

முன்னைய அரசாங்கம் பதவியிலிருந்த போது, ஆர்ப்பாட்டத் திடல்களுக்கு மக்கள் பெருமளவில் திரண்டு வந்தது உண்மை. அவ்வேளையில் நாடு பொருளாதார நெருக்கடியின் உச்சகட்டத்தில் இருந்ததால் மக்களுக்கு வேறுவழியே இருக்கவில்லை. அரசாங்கத்தை பதவிவிலகச் செய்வதன் ஊடாக ஆற்றலுள்ள அரசாங்கமொன்றை நிறுவி பொருளாதார வீழ்ச்சியை சரிசெய்ய இயலுமென்று மக்கள் முழுமையாக நம்பினர். வறுமைப்பிடியில் சிக்கியிருந்த மக்களுக்கு ஒரேயொரு நம்பிக்கை நட்சத்திரமாக எதிரணியினரே தென்பட்டனர்.

ஆனால் அன்றைய வேளையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு எதிரணியினர் முன்வராததை அறிந்து கொண்டதும், எதிரணியினர் மீதான மாயை கலைந்தது. பொருளாதார நெருக்கடியை சீர் செய்வதற்கான ஆளுமை இல்லாததன் காரணமாகவே நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்பதற்கு எதிரணியினர் தயங்குகின்றனரென்பதை மக்கள் உணர்ந்து கொண்டனர்.

நாட்டின் அரசியலமைப்பு விதிமுறைகளுக்கேற்ப ஜனாதிபதியாக ரணில் விக்கிரசிங்க பதவியேற்றதும், காட்சிகள் யாவுமே மாற்றமடைந்தன. நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சிக்குச் செல்லப் போகின்றதென்று எதிரணியினர் பிரசாரம் செய்தனர். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று தீவிர பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எதிரணி தரப்பிலிருந்து இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுப்பதற்கான தனது முயற்சியில் இருந்து சற்றுமே பின்வாங்கவில்லை. அவர் தனது முயற்சிகளை நிதானத்துடன் முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றார். அவரது தலைமைத்துவத்தின் பலனை சில மாதங்களுக்குள்ளேயே நாடு கண்டு கொண்டது.

சமையல் எரிவாயுவுக்கும் வாகனங்களுக்கான எரிபொருளுக்கும் நாட்கணக்கில் மக்கள் நீண்ட கியூவரிசையில் காத்துக் கிடந்த அவலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே முடிவுக்குக் கொண்டு வந்தார். சமையல் எரிவாயு மற்றும் எரிபொருட்களின் விலைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. நாட்டின் பொருளாதார மீட்சிக்கான பாதையும் திறக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் ஆளுமையும் ஆற்றலும் நிறைந்ததென்பதை நாட்டு மக்கள் குறுகிய காலப்பகுதியிலேயே கண்டு கொண்டனர். எதிரணியினர் மீதான விம்பங்களும் கலையத் தொடங்கின. எதிரணியினர் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்வது தங்களது அரசியல் இலாபங்களுக்காகவேயன்றி, நாட்டின் மீதான அக்கறையின் பேரில் அல்லவென்பதை மக்கள் நன்றாகவே தெரிந்து கொண்டனர்.

எனவே ஆர்ப்பாட்டங்களின் தீவிரத்தன்மையும் படிப்படியாகவே குறையத் தொடங்கியது. நாட்டில் பொருளாதார மீட்சி படிப்படியாகவே வெளிப்படையாகத் தென்படுகின்ற போது, அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதில் அர்த்தமெதுவும் இல்லையென்பதே மக்களின் எண்ணமாக உள்ளது.

எதிரணியில் உள்ளவர்களில் பலர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு நாட்டை மீட்டெடுப்பதற்கு ஆதரவளிக்க முன்வரப் போவதாக தகவல்கள் வெளிவருகின்றன. அத்துடன் தேசிய அரசாங்கமொன்றை அமைத்து நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைச் சரிசெய்வதற்கான ஆதரவையும் எதிரணி தரப்பில் சிலர் வெளிப்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுன கட்சியினரில் பலரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மீது நம்பிக்கை தெரிவித்துள்ளனர். நாட்டில் தேசிய மக்கள் சக்தி மீது பாரிய ஆதரவு அலை வீசுவதாக நிலவிய நம்பிக்கையும் இப்போது கலைந்து விட்டது. பொருளாதாரம் சீரடைந்து வருகையில் இடையூறு ஏற்படுத்துவதைப் பார்க்கிலும், அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதே சிறந்ததென அரசியல்வாதிகள் பலரும் கருதுவதாகத் தெரிகின்றது. எனவேதான் ஆர்ப்பாட்டங்களும் வலுவிழந்து போகின்றன.

editor.tkn@lakehouse.lk

# ஓந்தாச்சிமடம் ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய சக்திவிழா இன்று ஆரம்பம்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓந்தாச்சிமடம் ஸ்ரீ கற்பக விக்னேஸ்வரர் தேவஸ்தானத்துடன் இணைந்த தலமே ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலயமாகும். இந்த ஆலயத்தின் வருடாந்த 7 நாட்கள் கொண்ட சர்க்கரைப் பொங்கலுடன் கூடிய சக்தி விழாவானது இன்று செவ்வாய்க்கிழமை மாலை ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலயத்திலிருந்து அம்மனை எழுந்தருளப் பண்ண வந்து கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.**

மட்டக்களப்பு வாவியுடன் இணைந்த ஓந்தாச்சிமடம் வாவியும், அருகே நிழல் தரும் மரவிருட்சங்களும் அமைந்துள்ளன. கிழக்கே கடல் உள்ளது. இயற்கைக் காட்சிகள் நிறைந்த சூழலில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றும் ஒருங்கேயமைந்து, ஓம் எனும் ஆட்சியின் தத்துவப் பேரொளியாக துலங்கும் ஓந்தாச்சிமடம் ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலயமானது மட்டக்களப்பு_ கல்முனை பிரதான நெடுஞ்சாலையில் ஓந்தாச்சிமடம் பாலத்தினால் பயணிப்போரின் கண்களைக் கவரும் தலமாகும்.

ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலயம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. இந்து சமய ஆன்மீக எழுச்சியை அகிலமெங்கும் பரப்பும் நோக்கோடு இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் கதிர்காமத்திற்கு யாத்திரை செல்ல வந்தவர்கள் தங்களுக்குத் துணையாக கொண்டுவந்த தெய்வமே அன்னை ஸ்ரீ சிவமுத்துமாரியம்மனாகும்.

இந்தியாவிலிருந்து ஓந்தாச்சி எனும் பக்தனின் வழிகாட்டலில் யாத்திரைக்கு வந்தவர்கள் இந்த இயற்கைச் சூழலில் நாட்டங் கொண்டு முத்துமாரியம்மனை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததோடு, மடம் கட்டி தங்கினர். அதனாலேயே அக்கிராமத்துக்கு ஓந்தாச்சிமடம் என்னும் காரணப் பெயர் வந்ததாக வரலாறு கூறுகின்றது.

கிழக்கானது சக்தி வழிபாட்டியால் மேன்மையுறுகின்றது. வைகாசி பிறந்து விட்டால் கிழக்கெங்கும் விழாக்கோலம் பூணுகின்றது. ஊருக்கு ஊர் சக்தி வழிபாடுகள் இடம்பெறுகின்றன. மாரியம்மன் மழைக்குரிய தெய்வம். அன்னையின் அருள் மழையினால் நிலங்குளிர மழை வேண்டும் என்பதே அடியர்களின் வேண்டுதலாக உள்ளது.

இந்த ஆலயத்தில் வருடத்தில் இருமுறை ஆகம விதிமுறைகள் சாராத பாரம்பரிய பத்தாசி முறையினிலே சிவனை முன்னிறுத்தி சிவராத்திரி விரதமும், சித்திரை மாதத்தில் அம்மனின் ஆண்டு உற்சவமும் நடைபெற்று வருகின்றன. ஆலயத்தின் மூலஸ்தானத்திற்கு அருகில் உள்ள தீர்த்தக் கிணற்றுக்கும் கதிர்காமம் மாணிக்க கங்கைக்கும் நேரடித் தொடர்புள்ளதாவும் கிணற்றுநீர் பிணி தீர்க்கும் தீர்த்தமாகக் காணப்படுவதாகவும் ஐதீகம் நிலவுகின்றது. ஆலயத்திற்கு வரும் அடியார்கள் கிணற்றுநீரை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதைக் காண முடிகின்றது. இக்கிணற்றினுள்ளே ஆலயத்திற்கான வரலாற்றுக் கல்வெட்டும் காணப்படுகின்றது.

வருடாந்த பூஜையில் நாளை புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை தினங்களில் காலை, மதியம் விஷேட பூஜையைத் தொடர்ந்து மாலை கும்ப ஊர்வலமும் ஊரின் பிரதான வீதிகளை ஊர்காவல் பண்ணலும் நடைபெறும்.





வெள்ளிக்கிழமை (28) பிற்பகல் ஸ்ரீ அரசடிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து சக்தி விழாவிற்கான வாழைக்காய் எழுந்தருளப் பண்ணும் விஷேட பூஜையும், சனிக்கிழமை (26) அதிகாலை கும்பம் சொரிதல், நண்பகல் விஷேட பூஜை, மாலை அலங்கார ஆராதனையைத் தொடர்ந்து அம்மன் முத்துச் சப்பரத்தில் எழுந்தருளி பிரதான வீதிகளூடாக வீதிவலம் வரும் வைபவம் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை (30) காலை, நண்பகல் பூஜையைத் தொடர்ந்து பிற்பகல் விநாயகப் பானைக்கு நெல் குற்றுதலும், இரவு விஷேட பூஜையும், திங்கட்கிழமை (01) அதிகாலை விஷேட சக்தி யாகம், அபிஷேகம், பூரண கும்பம் நிறுத்துதல், விநாயகப் பானை எழுந்தருளப் பண்ணல், காத்தான் கன்னிமார் வைத்தல், மாலையில் அம்மனுக்கு பூஜை ஒப்புக் கொடுத்தல் இடம்பெற்று வருடாந்த சக்தி விழா நிறைவுறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை (02) இரவு வைரவர் பூஜையும், வெள்ளிக்கிழமை காலை (05) சித்திரகுப்த விரதமும் சித்திரைப் பூரணை விரதமும் பிற்பகல் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவும் நடைபெறவுள்ளன.

ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் ஆலய பிரதம குரு விஸ்வப்பிரம்மஸ்ரீ ஏ.குமாரலிங்கம் குரு, ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலய நித்திய குரு விஸ்வப்பிரம்மஸ்ரீ வி.விஸ்வரூபன் ஐயா மற்றும் ஸ்ரீ கற்பக விக்னேஸ்வரர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பி. கஜேந்திரக் குருக்கள் ஆகியோர் கிரியைகளை நிகழ்த்துவர்.

சக்தி விழா ஆரம்பிப்பதற்கு முன்பாக கிராம மக்கள் மற்றும் அயல் கிராமங்களின் நலன் கருதி கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இரு நாட்களும் சிறப்பு சுதர்ஷன மஹா யாகம் வாஸ்து சாந்தியுடன் ஆரம்பமாகி நடைபெற்றது. இந்த யாகத்தை விஸ்வப் பிரம்மம் வை.இ.எஸ். காந்தன் குருக்கள் ஆசியுடன் பாணந்துறை ஸ்ரீ கந்தசுவாமி கோவில் பிரதம குருவும் தெகிவளை ஸ்ரீ சாய் விஷ்ணு கோயில் ஆதீனகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ இலஷ்மிகாந்த ஜெகதீசக் குருக்கள் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.



சிவம் பாக்கியநாதன்
மட்டக்களப்பு விஷேட நிருபர்

# காத்தான்குடியில் வறிய மக்களுக்காக நடத்தப்பட்ட இலவச ஆடையகம்

**காத்தான்குடி பிஸ்மி இளைஞர் கழகம் நான்காவது வருடமாக தேவையுடையோருக்கான பெருநாள் இலவச ஆடையகம் ஒன்றை சில தினங்களுக்கு முன்னர் நடத்தியது. கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த இலவச ஆடை வழங்கும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டு நான்காவது வருடமாக நடத்தப்பட்டது.**

வறிய குடும்பங்களை இலக்காகக் கொண்டு அவர்கள் பெருநாள் தினத்தில் மற்றவர்களைப் போல புதிய ஆடைகளை அணிய வேண்டும் என்பதற்காக இந்த வேலைத்திட்டத்தினை காத்தான்குடி பிஸ்மி இளைஞர் கழகம் மேற்கொண்டு வருகின்றது

பிஸ்மி நிறுவனத்தின் ஸ்தாபகர் அஷ்ஷெய்க் எம். பி. எம்.பிர்தௌஸ் நழீமி ஆலோசனை, வழிகாட்டல் என்பவற்றுடன் இதன் பணிப்பாளர் அஷ்ஷெய்ஹ் எம் .எஸ் .எம்.நுஸ்ரி நழீமி மற்றும் பிஸ்மி கல்வி நிறுவனம், பிஸ்மி இளைஞர் கழகம் என்பவற்றின் விரிவுரையாளர்கள் அதன் அங்கத்தவர்களது முயற்சியின் பயனாகவும், பிஸ்மியில் கல்வி கற்கின்ற மாணவர்களது ஒத்துழைப்புடனும் இந்த இலவச ஆடையகம் நடத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்த இலவச ஆடையகத்தில் 150 பயனாளிக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு 600 பேருக்கு மேல் பயனடைந்துள்ளனர். உரிய பயனளி அழைக்கப்பட்டு அவர்களுக்கான ஆடைகளை அவர்களே தெரிவு செய்து பெற்றுக் கொண்டனர்.

இந்த முயற்சியின் ஊடாக மிகவும் வறிய குடும்பங்களை சேர்ந்த 150 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாக பயனடைந்தன.





எம்.எஸ்.எம்.நூர்தீன்
புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

# கிளிநொச்சி வடக்கு பிரதேசத்தில் மாணவர் இடைவிலகல் அதிகரிப்பு

**கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகக் குறைவாகக் காணப்படுவதுடன், இடைவிலகல்களும் அதிகரித்துக் காணப்படுவதாக வலயக் கல்வித்திணைக்கள தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.**

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுங்கற்ற வரவுகள் மற்றும் இடைவிலகல் என்பன அதிக அளவில் காணப்படுகின்றன. குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் அமைந்திருக்கின்ற பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகக் குறைவாக காணப்படுகின்றது.

## பாடசாலை வருகையிலும் வீழ்ச்சி

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட முதல் நிலை பாடசாலைகளான முருகானந்தா கல்லூரி, தருமபுரம் மத்திய கல்லூரி, பிரமந்தனாறு ஆகிய பாடசாலைகளிலும் ஏனைய ஆரம்ப இடைநிலை பாடசாலைகளிலும் மாணவர்களின் வரவு மிகக் குறைவாக காணப்படுவதுடன், இடைவிலகல்களும் அதிகளவிலே காணப்படுகின்றன என்றும் வலய கல்வி திணைக்கள தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

இதேவேளை இவ்வாறு இடைவிலகிய மாணவர்களை மீளக்கற்றலில் இணைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அவர்களது தேவைகள் மற்றும் அவர்களது குடும்பத்தின் பொருளாதார நிலைமைகளை நிறைவு செய்ய வேண்டிய அவசியம் முதலில் உள்ளது.



அவ்வாறு நிறைவு செய்கின்ற போதுதான் குறித்த இடைவிலகல் மற்றும் ஒழுங்கற்ற வரவுகளை சீர்செய்யக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட கிளி/ சாந்தபுரம் பாடசாலையில் 55 இற்கு மேற்பட்ட மாணவர்கள் ஒழுங்கற்ற வரவுகளை கொண்டு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யதுபாஸ்கரன்
(பரந்தன் குறூப் நிருபர்)

# கட்டாரில் ரமழான்-2023 கவியரங்கம்

தோஹா கட்டாரில் 'ரமழான் 2023' எனும் தலைப்பில் கவியரங்கம் இலங்கை பாரம்பரிய உணவகமான 'வெல் ஆன் ஹெரிடேஜ்' உணவகத்தில் நடைபெற்றது. இக்கவியரங்கத்தில் இலங்கையை சேர்ந்த கவிஞர்கள் சுல்தான் பைசர், முஹம்மத் ஹசன், முஹம்மத் சமீன், ரியாஸ் மொஹமத், இம்திஸாஹசன் றௌஸான் ஆகிய ஐவரும், தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞர்கள் தஞ்சாவூரான், முஹம்மது நிசார், செந்தமிழ்ச் செல்வி ஆகிய மூவரும் பங்குகொண்டு சிறப்பாக தங்களது கவிதைகளை சமர்ப்பித்தனர்.

கவியரங்கத்திற்கு தலைமை வகித்த ஜின்னாஹ் ஷரிபுத்தீன் உரையாற்றும்போது, தமது கலை, இலக்கிய பயணத்தைப் பற்றியும், தமது இலக்கிய பயணத்தில் ஊடகவியலாளர்கள் பெருந்துணையாய் நின்றதையும், ஊடகவியலாளர்கள் இன்றேல் தன்னைப் போன்ற கவிஞர்கள், கலைஞர்கள் உலகுக்கு அடையாளம் காட்டப்படாமல் போயிருப்பார்கள் என்றும், தாம் ஊடகத்துறையை சார்ந்த நண்பர்களுக்கு இத்தருணத்தில் நன்றி சொல்லிக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

வளரும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் தமது வாசிப்பையும், எழுதும் பழக்கத்தையும், வழமையாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் இடையில் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து எழுத வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வினை இலங்கையின் ஊடகவியலாளர் எம்.ஜே. பிஸ்ரின் முஹம்மத் ஒருங்கிணைத்திருந்தார். நிகழ்வினை முஹம்மத் முனவ்வர் தொகுத்து வழங்கினார். இக்கவியரங்க நிகழ்விற்கு தமிழகத்தின் மனிதநேய கலாசாரப் பேரவையும் அனுசரனையாளர்களில் ஒருவராக ஆதரவு தந்ததை அனைவரும் பாராட்டினார்கள்.




கவியரங்கம் பிற்பகல் 3: 30 மணிக்குத் தொடங்கி, நோன்பு திறப்பு விருந்தோம்பலுடன் நிறைவுற்றது.





(முதுவை ஹிதாயத்)

# காங்கேசன்துறை-காரைக்கால் கப்பல் சேவையினால் இலங்கை-இந்திய மக்களுக்கு அதிக அனுகூலங்கள்

காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் காரைக்கால் துறைமுகத்துக்குமிடையில் பயணிகள் கப்பல் சேவை இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை அனைவராலும் வரவேற்கப்படுமென்பதுடன், இந்த பயணிகள் கப்பல் சேவையினால் இரு நாடுகளும் நன்மை அடையுமென்பதும் உண்மை.

காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்குமிடையில் நான்கு மணி நேர பயணத்தைக் கொண்ட இந்த கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக அண்மையில் கருத்து வெளியிட்டிருந்த துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, காங்கேசன்துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, புதிய பயணிகள் முனையத்தை நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், இந்தக் கப்பல் சேவையில் ஒருவழி பயணக் கட்டணமாக பயணி ஒருவரிடமிருந்து 50 டொலரை அறவிடுவதற்குத் தீர்மானித்துள்ளதுடன், பயணி ஒருவர் 100 கிலோகிராம் பொருட்களுடன் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த பயணிகள் கப்பல் சேவையினால் இரு நாடுகளிலும் பிரதானமாக சுற்றுலா அபிவிருத்தி ஏற்படுவதுடன், அந்நிய செலாவணி வருமானம் அதிகரிக்கும். அத்துடன் வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைந்து, புதிய வர்த்தகத் தொழில்களுடன் புதிய வர்த்தகர்கள் உருவாகுவார்கள், கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு, புதிய கைத்தொழில் உற்பத்தி நிலையங்கள் உருவாகுவதுடன், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். கலாசார ரீதியான நட்புறவு ஏற்படும் சாத்தியங்கள் இரு நாடுகளுக்குமிடையில் காணப்படுகின்றன.

இவை இவ்விதமிருக்க, இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான விமான சேவை பயணக் கட்டணத்துடன் ஒப்பிடுகையில், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்குமிடையிலான கப்பல் சேவை பயணக் கட்டணம் மிகக் குறைந்தளவேயாகும். இந்நிலையில், பயணிகள் கப்பல் சேவை மூலமாக அனைத்துத் தரங்களைச் சேர்ந்த மக்களும் சிறு தொகை பணத்துடன் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும். பொருளாதாரத்தில் வசதி குறைந்த மக்களுக்கும் பயணத்தை மேற்கொள்வதற்கு வாய்ப்புக் கிட்டும். இதனால், இரு நாடுகளுக்குமிடையில் போக்குவரத்துச் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், அதிகளவான வருமானத்தை ஈட்டவும் முடியும்.

அத்துடன், இப்பயணிகள் கப்பலில் பயணிக்கும் பயணிகள், வியாபாரப் பொருட்களுடன் பயணிக்கும் பட்சத்தில் இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைந்து, அனைத்து மக்களுக்கும் உணவுகள் உட்பட அனைத்து வகையான பொருட்களும் தட்டுப்பாடின்றியும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக் கிட்டும். அத்துடன், இந்தியாவின் உற்பத்திப் பொருட்கள் யாழ். மாவட்டம் உட்பட வடமாகாணத்தில் தாராளமாக புழக்கத்தில் காணப்படுமென்பதுடன், நுகர்வோர் பாரிய நன்மையடைவர். இதனால், மக்களின் அத்தியாவசியத் தேவைகளை இலகுவில் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்குமென, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினுடைய யாழ். பிராந்திய நிலைய சமூக கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நவரட்னம் பால முரளி தெரிவித்தார்.

## மேலும் தாமதமின்றி கப்பல் சேவையை நடத்துமாறு பயணிகள் வேண்டுகோள்

இந்த பயணிகள் கப்பல் சேவையினால் இலங்கையும் இந்தியாவும் அடையும் நன்மைகளை தனித்தனியாக ஆராயும் போது பல அனுகூலங்களுக்கு வாய்ப்புள்ளது.

காங்கேசன்துறை பிரதேசம் கடந்தகால யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு இடப்பெயர்வை எதிர்நோக்கிய பிரதேசமாகும். யுத்தம் முடிவடைந்து தற்போது அமைதியான சூழ்நிலை நிலவும் இந்தச் சந்தர்ப்பத்தில், காங்கேசன்துறையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





இந்தச் சூழ்நிலையில், காங்கேசன்துறை துறைமுகத்தின் மூலமாக பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் காங்கேசன்துறை பிரதேசம் துரித அபிவிருத்தியடைவதுடன், அப்பிரதேசத்தில் மீள்குடியேறி வரும் மக்களும் பொருளாதாரத்தில் முன்னேறும் வாய்ப்பு காணப்படுவதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

பயணிகளின் நன்மை கருதி காங்கேசன்துறை பிரதேசத்தில் புதிய கப்பல் போக்குவரத்து முகவர் நிலையங்களும் புதிய வாகனப் போக்குவரத்து முகவர் நிலையங்களும் உருவாகும். புதிய ஹோட்டல்கள், உணவு விடுதிகள், பயணிகளுக்கான தங்குமிட வசதிகள், பல்வேறுபட்ட வர்த்தக நிலையங்கள் உருவாகும். புதிய கைத்தொழில் உற்பத்தி நிலையங்கள் தோற்றம் பெறும். இவற்றினால் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் கிடைப்பதுடன், அவர்கள் வருமானம் ஈட்டி பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்து, இன்னும் பல தொழில் முயற்சிகளை காங்கேசன்துறை பிரதேச இளைஞர், யுவதிகள் மேற்கொள்வதற்கு வழியேற்படும். இவற்றின் பயனாக காங்கேசன்துறை பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடையும்.

இப்பயணிகள் கப்பல் சேவை வெற்றிகரமாக அமையும் பட்சத்தில் காங்கேசன்துறை பிரதேசம் பொருளாதார, வர்த்தக மையமாக மாற்றமடையலாமெனவும் எதிர்வுகூற முடியும்.

இவ்வாறு காங்கேசன்துறை பிரதேசம் துரித அபிவிருத்தியடையும் பட்சத்தில் அந்த அபிவிருத்தி யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வியாபித்து, வடமாகாணமும் பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகளில் முன்னேற்றமடையும் வாய்ப்பு காணப்படுகின்றது. இவ்வாறு வடமாகாணம் முன்னேறினால் எமது நாட்டின் ஏனைய இடங்களும் பொருளாதாரத்தில் முன்னேறுமெனவும், அவர் தெரிவித்தார்.

பொருளாதார வீழ்ச்சியை சந்தித்துள்ள எமது நாடானது, பொருளாதாரத்தில் முன்னேறுவதற்காக வெளிநாடுகளுடன் தொடர்புகளை அதிகரிக்க பல்வேறுபட்ட வழிகளைக் கையாள்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு அது சிறந்த வரப்பிரசாதமாகவே கருதப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.


## மக்களுக்கு வியாபாரத்துக்கான வாய்ப்பு; கலாசார உறவுகள் மேலும் வலுவடையும்

இதேவேளை, இந்த பயணிகள் கப்பல் சேவையினால் இலங்கையர்களை விட இந்தியர்களே ஒப்பீட்டு ரீதியாக அதிகூடியளவில் நன்மையடையும் வாய்ப்புக் காணப்படுகின்றது. ஏனெனில், இந்தியாவானது சனத்தொகை பெருக்கம் அதிகரித்த நாடாகுமென்பதுடன், இந்தியாவில் விவசாயம், கைத்தொழில் உட்பட அனைத்திலும் உற்பத்திகள் சிறந்து காணப்படுவதனால், அந்நாட்டில் தேவைக்கு மேலதிகமாக உற்பத்திப் பொருட்கள் காணப்படுகின்றன. அந்நாட்டில் அவ்வாறு தேவைக்கு மேலதிகமாகக் காணப்படும் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் சற்றுத் தளர்ச்சி காணப்படுவதுடன், உற்பத்திப் பொருட்களும் மிகவும் குறைந்த விலையிலேயே அந்நாட்டில் விற்பனையாகின்றன. தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் தளர்ச்சியை எதிர்நோக்கி வரும் இந்திய நாட்டு உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும், தமது உற்பத்திப் பொருட்களை இலங்கையில் சந்தைப்படுத்துவதற்கு முன்வரும் போது, அது அவர்களுக்கு வெற்றிகரமானதாக அமையும்.



இந்தியாவில் பெருகி மலிந்து காணப்படும் உற்பத்திப் பொருட்கள், இலங்கையில் அரிதாகவும் அதிக விலையுடனும் காணப்படுகின்றன. ஆகையினால், இந்திய உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும், இலங்கையில் தமது உற்பத்திப் பொருட்களை சற்று இலாபம் வைத்து விற்பனை செய்யும் போது, அவர்கள் வருமானத்தில் முன்னேறும் நிலைமை ஏற்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

கொழும்புக்கும் இந்தியாவுக்குமிடையில் இடம்பெறும் கப்பல் சேவையின் தூரத்தையும் நேரத்தையும் விடவும், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்குமிடையிலான பயணிகள் சேவையின் தூரம், நேரம் மிகக் குறைவானதென்பதுடன், செலவும் குறைவாகும். ஆகையினால், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்குமிடையில் பயணிகள் கப்பல் சேவையை தீர்மானிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆரம்பித்து, வெற்றிகரமாக நடத்துவதற்கு எமது அரசாங்கம் ஆக்கபூர்வமான வேலையை முன்னெடுக்க வேண்டுமென, பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



இந்நிலையில், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவையினால் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பொருளாதார, வர்த்தக உறவு மேன்மேலும் வளர்ச்சியடைவது மாத்திரமின்றி, கலாசார உறவும்மேன்மேலும் வலுவடையுமென்பது உறுதியாகும்.

— ஆர்.சுகந்தினி

# நெற்செய்கையை மேம்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம், FAO ஒன்றிணைந்து நான்கு மில் யூரோ பெறுமதியான திட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது (FAO) ஐரோப்பிய ஒன்றியத்துடன் (EU) ஒன்றிணைந்து நெற்பயிர்ச் செய்கைத் துறையின் உற்பத்தித்திறன் மற்றும் நிலைபேண்தன்மையை ஊக்குவிப்பதன் மூலமாக இலங்கையின் உணவுப் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நான்கு மில்லியன் யூரோ (அண்ணளவாக 1.5 பில்லியன் ரூபா) நிதிப்பங்களிப்புடனான இந்த முன்னெடுப்பானது கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ் சாய்பி மற்றும் FAO இன் இலங்கைக்கான பிரதிநிதி விம்லேந்திர ஷரண் ஆகியோரது ஆசியுடன் அம்பாந்தோட்டை விவசாய தொழில்நுட்ப பூங்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கமத்தொழில் அமைச்சு மற்றும் மகாவலி அதிகாரசபையினால் ஆதரவளிக்கப்பட்டு FAO இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற, நிகழ்ச்சித்திட்டமானது சமீபத்திய பொருளாதார நெருக்கடியினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பொலன்னறுவை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத்தளம், குருநாகல் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய ஏழு மாவட்டங்களின் 71,000 சிறு பரிமாண நெற்பயிர்ச் செய்கையாளர்களையும் 1,200 நெல் விதை விவசாயிகளையும் இலக்காகக் கொண்டுள்ளது.

விவசாயிகள் களப் பாடசாலைகளின் உத்தியோகபூர்வ நிகழ்வில் இலங்கைக்கான EU தூதுவர் டெனிஸ் சாய்பிஉரையாற்றும் போது, 'இப்புதிய நடவடிக்கையினால், விவசாயிகளது அதிக விளைச்சலுக்காக மாத்திரமின்றி, தங்களைச் சூழவுள்ள சுற்றுச்சூழலை பாதுகாத்து தங்களது உற்பத்தியையும் வருமானத்தையும் அதிகரிக்கக்கூடிய சிறப்பான விளைச்சலுக்காகவுமே நாம் உதவ விரும்புகிறோம்" என்று குறிப்பிட்டார்.

விவசாயப் பயனாளிகள் பாரம்பரிய பயிரிடல் முறைமையிலிருந்து காலநிலைத் திறன், நவீன விவசாய தொழிநுட்பங்களுக்கு மாறுவதற்கான உபகரண மற்றும் தொழிநுட்ப உதவிகளை பெற்றுக்கொள்வர். 0.5 ஹெக்டெயர் வரையில் பயிரிடும் தகைமையுடைய விவசாயிகள் 50 கிகி யூரியா உரத்தினையும் உரப் பாவனையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான அத்தியாவசிய உபகரணங்களையும் பெற்றுக் கொள்வர். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு பெறப்பட்ட 3,820 தொன்கள் யூரியா உரமானது தெரிவுசெய்யப்பட்ட சிறு நெல் வயல் நில விவசாயிகள் மற்றும் நெல் விதை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கமத்தொழில் அமைச்சிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளது. FAO மற்றும் EU என்பற்றுக்கு தன்னுடைய பாராட்டுதல்களை கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர வெளிப்படுத்தினார்.

'எமது நெற்பயிர்ச் செய்கையாளர்கள் கடந்த சில வருடங்களாக குறிப்பிடத்தக்க சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். FAO மற்றும் EU என்பவற்றிடமிருந்தான இவ்வுதவியானது சவாலான காலகட்டங்களிலான அவர்களது விடா முயற்சிக்கான எமது நன்றிக்கடனின் ஒரு சான்றாகும். இவ்வுள்ளீடுகளும் அறிவுப் பகிர்வுகளும் அரிசி உற்பத்தியினதும் இலங்கை நெல் உற்பத்தியாளர்களது வாழ்வாதாரத்தினதும் தரத்தினை உயர்த்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை' என்றார் அமைச்சர்.





"உள்நாட்டு நெற்பயிர்ச் செய்கைத் துறையில் நீண்டகாலமாக காணப்பட்ட சவால்களை நிவர்த்திப்பதனை இலக்காகக் கொண்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு EU இடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட உதவிக்காக நாம் நன்றியுடையவர்களாகின்றோம்' என்றார் இலங்கைக்கான குயுழு பிரதிநிதி விம்லேந்திர ஷரண்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலக ஏற்பாட்டில் சித்திரை வசந்தம் மாபெரும் புத்தாண்டு விழா

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை பொலிஸ், இலங்கை இராணுவம், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள சித்திரை வசந்தம்_ 2023 மிகவும் கோலாகலமாக மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.30 மணி முதல் இரவு 11.00 மணிவரை பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும் மாலை நேர இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.



ஆரம்ப நிகழ்வானது காலை 6.30 மணிக்கு நடைபெறும். காந்தி பூங்காவில் இருந்து இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டமும் மரதன் ஓட்டமும் நடைபெறும். காலை 8.30 மணிக்கு முகத்துவாரத்தில் இருந்து மட்டக்களப்பு நுழைவாயில் வரையிலான தோணி ஓட்டமும் பிற்பகல் 2 மணிக்கு வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச்சமர், முட்டி உடைத்தல், புதுவருட அழகன் மற்றும் அழகி போட்டி போன்ற சுவாரஸ்யம் நிறைந்த போட்டி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து காலை 11மணிக்கு உள்ளூர் வியாபார முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் அதிதிகளினால் திறந்து வைக்கப்படவுள்ளதுடன், இதில் பாரம்பரிய உணவுக் கூடங்கள் மற்றும் உள்ளூர் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சி, விற்பனை கூடங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

போட்டி நிகழ்ச்சிகள் வருமாறு:

மரதன் ஓட்டம் (ஆண் / பெண்), சைக்கிளோட்டம் (ஆண் / பெண்), தோணி ஓட்டம் (ஆண்), நீச்சல் அஞ்சல் ஓட்டம் (கலப்பு), வழுக்கு மரம் ஏறுதல் (குழு), முட்டி உடைத்தல், தலையணை சமர்,

கயிறு இழுத்தல் (ஆண் / பெண்), கிடுகு இழைத்தல் (பெண்), கோலம் போடுதல் (பெண்), சைக்கிள் மெதுவோட்டம் (50 வயதுக்கு மேல் ஆண்), யாணைக்கு கண் வைத்தல் (சிறுவர் சிறுமியர் 10 – 15 வயது), சாக்கோட்டம் (10 – 15 வயது),

பெண்களுக்கான தேங்காய் துருவுதல் (துருவிலை மட்டும் கொண்டுவருதல் வேண்டும்), தேசிக்காய் சமநிலை ஓட்டம் (10 தொடக்கம் 15 வயது_ தேசிக்காய் மற்றும் கரண்டி என்பன வழங்கப்படும்), ஊசிக்கு நூல் கோர்த்தல் (ஆண் / பெண்), போத்தலில் நீர் நிரப்புதல் (10_15 வயது), மிட்டாய் ஓட்டம் (10 வயதுக்குட்பட்ட சிறார்கள்), பலூன் உடைத்தல் (10_15 வயது), சங்கீதக் கதிரை (பெண் உத்தியோகத்தர்கள்), தொப்பி மாற்றுதல் (ஆண் உத்தியோகத்தர்கள்),

கயிறு இழுத்தல் பொலிஸ் மற்றும் இராணுவம் (ஆண்)_பொலிஸ் மற்றும் மாவட்ட செயலகம் (பெண்), கிராமியப்பாடல் (35 வயதுக்கு மேற்பட்டோர்), புத்தாண்டு அழகன், அழகி போட்டிகள் போன்றவை இடம்பெற்றதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மட்டுநகர் சுப்பர் சங்கீர்த் இசைக்குழு வழங்கும் இசை நிகழ்ச்சி என பல்வேறுபட்ட சிறப்பு நிகழ்ச்சிகளுடன் மாவட்ட செயலக சித்திரை வசந்தம் நிகழ்ச்சி கோலாகலமாக இடம்பெறவுள்ளது.




போட்டிகளில் கலந்துகொண்டு பெறுமதிமிக்க பணப்பரிசில்களையும் பரிசுப்பொதிகளையும் வெல்வது மாத்திரமல்லாது எமது மாவட்ட கலைஞர்களின் இசை மழையில் நனைந்திடவும் சித்திரை வசந்தம் ஏற்பாட்டுக்குழுவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

சித்திரை வசந்தம் 2023 நிகழ்விற்கு பிரதான அனுசரணையாளர்களாக மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் மற்றும் கோட்டைமுனை விளையாட்டுக் கழகம் என்பனவும், இணை அனுசரணையாளர்களாக அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக பிரமுகர்கள், சமூக மட்ட அமைப்புகள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் என்பன மாவட்ட செயலகத்துடன் கைகோர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

_ உதயகாந்த்
(கல்லடி குறூப் நிருபர்)

# வடக்கின் உதயம்

வட மாகாணத்தில்

# பனை வளம் அழிக்கப்படுவதை தடுக்க விசேட வேலைத் திட்டம்

**யாழ். விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தில் பனை வளம் அழிக்கப்படுவதை தடுக்க விசேட வேலை திட்டம் ஒன்று பனை அபிவிருத்தி சபையும், தென்னை பயிர் செய்கை சபையும் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக தென்னை பயிர்செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தே. வைகுந்தன் தெரிவித்தார்.

யாழில் நேற்றைய தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் தென்னை செய்கையும், பனை செய்கையும் கூடுதலான அளவு மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் பனை என்ற வளம் மிக முக்கியமானது. வடக்கு மாகாணத்தின் வளங்களாக இரண்டு கண்கள் காணப்படுகின்றன.

ஒன்று தென்னை மற்றையது பனை. ஆனால் பனை வளம் படிப்படியாக ஓரளவுக்கு குறைந்து கொண்டு செல்கின்றது. தென்னை செய்கை வீதம் கூடுதலாக இருக்கின்றது.



பனையினை வெட்டி, தென்னை செய்கையை கூடுதலாக செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

எமது பரிந்துரைக்கிணங்க தென்னை, பனை செய்கையினை ஒன்றாக இணைத்து செய்வதற்குரிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது ஒரு புதிய வேலை திட்டம் ஒன்றினை நாங்கள் முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

அதற்கான முன்னாயத்த வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக தென்னை செய்கையை மேற்கொள்ளாது, பனை மரம் அழிப்பதை நிறுத்துவதும் பனை, தென்னையை ஒன்றாக இணைத்து வளர்ப்பதை ஊக்குவிப்பதே அதன் நோக்கமாகும் என்றார்.

## வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

**ஓமந்தை விசேட நிருபர்**

வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் இன்று இடம்பெறும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு தெரிவித்துள்ளது.

நேற்று வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே ஹர்த்தாலுக்கான ஆதரவை வழங்குவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் சி. சிவகரன், யாழ். பிராந்திய கூட்டு இணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன், முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் நா.சற்குணராசா, மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் பு. நாகரூபன், வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். ரி. ராஜேஸ்வரன், கிளிநொச்சி தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தி. கிருஷ்ணன் ரூபன் ஆகியோர் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் பிரச்சினைகளை சமூகமயப்படுத்த மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டம் அவசியம்

**கோப்பாய் குறூப் நிருபர்**

தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பில் சர்வதேசத்திற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்ச்சியான செய்திகளை வழங்குவதற்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டம் அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சீ.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்,,



தமிழ் மக்கள் மீது விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்கள் ஆக்கிரமிப்புக்கள் இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளை சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்கள் இடம்பெற வேண்டும்.

ஆகவே சிறுபான்மை மக்கள் வாழும் இலங்கை நாட்டில் எமது உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தவும் சர்வதேச நீதியில் எமது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு ஜனநாயகப் போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா - கட்டையர்குளத்தில் சட்டவிரோத காடழிப்பு



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் 12 ஏக்கர் காடு சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ள போதும் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா, ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கட்டையர்குளம் பகுதியில் வன இலாகாவுக்கு சொந்தமான காட்டுப்பகுதி 12 ஏக்கர் கடந்த சில நாட்களாக அழிக்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து அரச அதிகாரிகள் பலருக்கும் கடந்த சில நாட்களுக்கு முன்னரே மக்கள் முறையிட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் குறித்த பகுதியில் காடழிப்பு மற்றும் அதனுடன் இணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போது அங்கு சென்ற கிராம மக்கள் அதனை தடுத்து நிறுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் ஈச்சங்குளம் பொலிசாருக்கும் முறைப்பாடு செய்திருந்தனர். காடழிப்பு இடம்பெற்ற போது குறித்த பகுதிக்கு தமது பகுதியில் இல்லாத வாகனங்கள் சில வந்து சென்றதாகவும் கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட செயலாளர், வனஇலாகா ஆகியோருக்கும் கிராம மக்களால் நேற்று எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜெர்மனிக்கான இலவச சட்ட ஆலோசனை நிறுவனம்



**கோப்பாய் குறூப் நிருபர்**

ஜெர்மனிக்கான இலவச சட்ட ஆலோசனை நிறுவனம் யாழில் நேற்று (24) திறந்து வைக்கப்பட்டது.

ஜெர்மன் நாட்டின் 40 வருட கால சட்டத்துறை அனுபவம் வாய்ந்த முட்பன் கோறன்பிளோ நிறுவனம் தென்னாசியாவுக்கான இரண்டாவது சட்ட ஆலோசனை நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்துள்ளது. குறித்த அலுவலகத்தை முட்பன் கோறன்பிளோ நிறுவனத்தின் சட்டத்தரணி கோறன்பிளோ திறந்து வைத்ததுடன் அவருடன் சட்டத்தரணி எம்.டி.எஸ் இராமச்சந்திரனும் பங்குபற்றினார்.

# தமிழ் எம்.பிக்களை நம்ப வேண்டாம்



**ஓமந்தை விசேட நிருபர்**

தமிழ் எம்.பிக்களை நம்ப வேண்டாம் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்தார். போராட்ட பந்தலில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்தின் முடிவிலும் தமிழர்கள் பொது வாக்கெடுப்புடன் கூடிய இறுதி அரசியல் தீர்வுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளை கண்டுபிடிக்கவும். தமிழ் இறையாண்மைக்கும்

அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உதவிக்காகவும் எமது போராட்டத்தின் 2255 ஆவது நாள் ஆகும்.

நாம் எதிர்நோக்கும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒரே தீர்வு, நிரந்தர அரசியல் தீர்வாகும்.

# கால்நடை வளர்ப்பாளர்கள் யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மல்லாகம் சந்தியில் கால்நடை வளர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை மேற்கொண்டனர்.

வலிகாமம் வடக்கு பகுதிகளில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் தொடர்ந்து திருடப்பட்டு வருவதை எதிர்த்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்ட இடத்தில் பசு ஒன்றையும் கட்டி போராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் செய்த இடத்திற்கு அருகில் இருந்த காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு சென்று மகஜரையும் கையளித்தனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்தவும்

## மகளிர் அமைப்புக்கள் வலியுறுத்தல்



இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் (23) காலை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சில் அமைச்சரரை சந்தித்து இது தொடர்பான கோரிக்கையை வழியுறுத்தினர்.

வெளிநாடுகளில் பணியாற்றும் பெண்கள் விசேடமாக வீட்டுப் பணிப் பெண்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை டிஜிட்டல் மயத்தின் மூலம் இலகுவாக அடையாளங்கண்டு அவற்றுக்கு தீர்வையும் பெற்றுக்கொள்ள வசதியாக அமையும் என்று பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதன்போது வலியுறுத்தினர்.

ஜெஸ்மின் மகளிர் அமைப்பின் தலைவி திருமதி; முகமத் ஹுசைன் நஸ்மியா, கெமி காந்தா பெரமுன அமைப்பின் தலைவி சிரியானி பதிரகே, காலி வர்த்தக மகளிர் அமைப்பின் தலைவி திருமதி வாசனா பிரியந்தி ஆகியோர் தலைமையிலான பிரதிநிதிகள் இது தொடர்பாக மகஜர் ஒன்றையும் அமைச்சரிடம் கையளித்தனர்.

நாட்டின் பெண்கள் தமக்கான தொழில் வாய்ப்புகளை தேடிக்கொள்வது தமது தொழிலுக்காக செல்லும் இடங்களில் அல்லது முகவர் நிறுவனம் பாதுகாப்பானது என்பதை உறுதி செய்துக் கொள்ளல் தங்குமிட வசதி சம்பளம் முதலானவற்றுடன் அவசர நிலையின் போது தொடர்பு கொள்ளக்கூடிய பணியாற்றும் நாட்டின் தூதரகம் முதலான பல விடயங்களை இதன் ஊடாக சகலரும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் இவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.



லேக்ஹவுஸ் ஊடக அக்டமியின் வெகுசன மற்றும் தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறியை பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கு பேராசிரியர் டீயூடர் வீரசிங்க புத்தாண்டின் முதலாவது விரிவுரையை நடத்தியபோது....





தர்கா நகர் களு/அல்ஹம்றா மகா வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா அதிபர் ஜனாபா பஸ்லியா பாஸி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பாடசாலை பழைய மாணவர் சங்கம் அனுசரணை வழங்கியதோடு தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி அல்ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்கள் அதிதியாக கலந்து சிறப்பித்தார்.
படங்கள்: பேருவளை விசேட நிருபர்

Capitaltrust
Capital TRUST Research (Pvt) Ltd
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Declines in several banking stocks result in All Share Price Index closing marginally lower...

Daily Market Watch
24th April 2023


### Market Commentary

The market opened the week on a mildly negative note with the All Share Price Index shedding 0.79% to close at 9187.29 as investors awaited for clarity regarding the debt restructuring. Banking heavyweights HNB and Commercial Bank declined by 4.9% and 3.0%, while DFCC Bank declined by 4.6%.Turnover recorded LKR 678.6 mn with trading in Dialog and Sampath Bank accounting for 9.5% and 8.4% of the turnover respectively. Meanwhile, tourist arrivals for the period 1st April to 20th April 2023 recorded 69,799, which is 11% higher than the tourist arrivals recorded for the full month of April 2022. The ongoing recovery in tourist arrivals is expected to have a strong positive impact on the economy.


### Market Performance

| | 24.04.2023 | 21.04.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,187.3 | 9,260.4 | -0.79 |
| S&P SL 20 Index | 2,683.8 | 2,711.1 | -1.01 |
| Turnover (LKR mn) | 678.7 | 966.8 | -29.8 |
| Foreign Purchases (LKR mn) | 146.5 | 311.5 | -53.0 |
| Foreign Sales (LKR mn) | 67.3 | 83.5 | -19.4 |
| Market Cap (LKR bn) | 3,913.6 | 3,943.7 | -0.8 |
| Market Cap (US$ bn) | 12.2 | 12.3 | -0.8 |
| Traded Companies | 243 | 240 | 1.3 |
| Market PER (x) | 5.0 | 5.1 | -0.8 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 0.0 |
| Dividend Yield (%) | 4.0 | 4.0 | 0.8 |


### Contributors to ASPI





### Market Benchmarks





### Top Gainers and Loosers




### Relative Strength Index (RSI)





### Turnover Breakdown




### Key Rates

| | 24.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 21.45% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 22.96% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date - 20.07.2023.

LB Finance PLC (LFIN) - LKR 2.00. XD date - 25.04.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date - 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date - 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date - 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date - 02.05.2023.

Overseas Realty (Ceylon) PLC (OSEA) - LKR 1.25. XD date - 27.04.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date - 06.06.2023.

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 Shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# சர்வதேச ஜனநாயக பாராளுமன்ற உச்சிமாநாடு இந்தியாவில்

## டென்மார்க் தூதுக்குழுவிடம் இந்திய சபாநாயகர் தெரிவிப்பு

இவ்வாண்டு இந்தியாவில் நடைபெற வுள்ள ஜி20 உச்சி மாநாட்டுக்கு புறம்பாக பி20 என அழைக்கப்படும் நாடுகளின் பாராளுமன்ற சபாநாயகர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்குபற்றும் மாநாட்டையும் இந்தியாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இந்திய பாராளுமன்ற சபாநாயகர் ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

தம்மை சந்திக்க வந்த ஐரோப்பிய விவகாரங்களுக்கான டென்மார்க் பாராளுமன்ற குழுவினருடன் கடந்த செவ்வாயன்று தமது அலுவலகத்தில் கலந்துரையாடிய போது இவ்வாறு தெரிவித்த சபாநாயகர் ஓம் பிர்லா, ஜி20 நாடுகள் மற்றும் அழைக்கப்படும் நாடுகளின் பாராளுமன்ற உயர் அதிகாரிகள் பங்குபற்றும் இந்த பாராளுமன்ற உச்சிமாநாடு, பாராளுமன்ற ஆட்சி நிர்வாகத்தின் அவசியத்தையும் ஜனநாயக பண்புகளின் சிறப்புகளையும் நிலைநிறுத்தும் என்றும் தூதுக்குழுவிடம் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவைப் போலவே டென்மார்க்கும் முதிர்ந்த ஜனநாயக நாடு என்றும் மனித உரிமைகள், சமாதானம் மற்றும் ஜனநாயகத்தை ஆதரிக்கும் நாடுகள் என்ற வகையில் இரு நாடுகளுக்கும் இடையே பாராளுமன்ற ரீதியான பரிமாற்றங்கள் அவசியம் என்றும் அவர் மேலும் கூறினார்.

இரு நாடுகளுக்கு இடையே 2020ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட மூலோபாய பசுமை உடன்படிக்கை காரணமாக எதிர்காலத்தில் இருதரப்பு வர்த்தக உறவு மேம்படுவதோடு முதலீடுகளும் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக தன்னைச் சந்தித்த குழுவின் தலைவர் நீல்ஸ் ஃபிளமிங் ஹான்சனிடம் ஓம் பிர்லா தெரிவித்தார்.

# உலகப் பிரச்சினைகளுக்கு பௌத்த சிந்தனைகள் மருந்தாகும்

## பௌத்த உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி

இந் நூற்றாண்டின் மிகச் சவாலான காலக் கட்டத்தில் உலகம் உள்ளது. யுத்தம், பொருளாதார நெருக்கடிகள், காலநிலை மாற்றம், பயங்கரவாதம் ஆகிய இக்காலத்து உலகப் பிரச்சினைகளுக்கு பௌத்த சிந்தனைகள் மூலம் தீர்வு காணலாம் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற உலக பௌத்த உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, தன் ஆரம்ப வைபவ உரையில் இவ்வாறு குறிப்பிட்டதோடு, நிரந்தர சமாதானம் வேண்டுமானால் யுத்தங்களையும், வெற்றிகளையும் தோல்விகளையும் கைவிட வேண்டியது அவசியம் என்ற புத்தரின் போதனையை நினைவூட்டினார்.

சர்வதேச பௌத்த சம்மேளனமும் இந்திய கலாசார அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த முதலாவது பௌத்த உச்சி மாநாட்டில் 30 நாடுகளைச் சேர்ந்த பௌத்த அறிஞர்களும் ஆய்வாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இரண்டாவது நாள் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா, பௌத்த தியானம் என்பது சிந்தனைகளை மனதின் உட்புறமாக வியாபிக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டது என்றும் சடங்குகளுக்கும் மேள, தாளங்களுக்கும் முக்கியத்தும் அளித்தல் அது வெறும் ஓசையாக மட்டுமே முடிந்துவிடும் என்றும் தெரிவித்தார்.

# இந்திய பொருளாதார வளர்ச்சி முன்னிலை வகிக்கிறது இந்நிலை தொடரும் என்கிறது சர்வதேச நாணய நிதியம்

இந்தியாவின் பொருளாதாரம் சிறப்பாக செயல்பட்டு உறுதியாகத் திகழ்வதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

உலக பொருளாதாரத்தில் 6.8 பொருளாதார வளர்ச்சி கொண்டதாக விளங்குவதால் சிறப்பான பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரிவுத் தலைவரான டேனியல் லே கூறியுள்ளார்.

கடந்த வருட இந்திய பொருளாதார வளர்ச்சி 6.8 வீதமாகக் காணப்பட்டதாகக் கூறியுள்ள அவர், 202324 காலப்பகுதிக்கான வளர்ச்சி வீதம் 5.9 ஆக இருக்கும் எனக் கணித்துள்ளதோடு, வேகம் சற்று குறைந்திருந்தாலும், உலகின் வேகமாக வளர்ச்சிகாணும் பொருளாதாரமாகவே அது தொடர்ந்தும் திகழும் எனவும் தெரிவித்துள்ளார்.

2020, 21 காலப்பகுதிக்கான வளர்ச்சி நாம் எதிர்பார்த்ததை விட சிறப்பானதாகவே காணப்பட்டது. மக்களின் அடக்கி வைக்கப்பட்டிருந்த செலவு செய்யும் பழக்கம் காரணமாக நுகர்வு அதிகரித்தது. அதனால் இவ்வாண்டில் வளர்ச்சி மந்தமடைந்து அடுத்த வருடம் வளர்ச்சி 6.3 ஆக அதிகரிக்கும். இது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு தேவையான புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும் என்றும் அவர் தன் பொருளாதார ஆருடத்தில் குறிப்பிட்டுள்ளார்.


## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **09/05/2023**

இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **10/05/2023**

இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **11/05/2023**

இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.

திகதி : **12/05/2023**

இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
SINGER FINANCE
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.



Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


## விலைமனுக்கோரல் அறிவித்தல்

### பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் விற்பனை கம்பஹா பிரதேச சபை

கம்பஹா பிரதேச சபையின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பின்வரும் ட்ரக்டர் மற்றும் சிதைவடைந்த ட்ரேலரை விற்பனை செய்வதற்காக என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

I. அவ்விலைமனுக்களை, 2023.05.17 அன்று மு.ப.10.00 இற்கு முன்னர் பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரம், கருமங்கள் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அலுவலர், கம்பஹா பிரதேச சபை மிரிஸ்வத்தை - முதுன்கொடை என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதன் மூலம் ஒப்படைக்கலாம்.

II. மீளளிக்கப்படும் ரூபா 5000.00 மற்றும் மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் ரூபா 1000.00 இற்கான தொகையை அலுவலக நேரங்களில் இவ்வலுவலகத்தில் செலுத்தி, 2023.05.16 அன்று பி.ப.3.00 வரை இற்கான விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

III. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் நீங்கள் அல்லது உங்கள் எழுத்துருவ அனுமதியைப் பெற்றுள்ள பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

IV. இவ்வலுவலகத்திற்கு உரித்தான கத்துருவத்த நிருவாக மற்றும் நிருவாகப்பிரிவின் வளாகத்தில் அலுவலக நேரங்களில் இவ் வாகனங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

V. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கம்பஹா பிரதேச சபைக்கு உரித்தாகும்.

| உருப்படி | வாகனங்களின் எண்ணிக்கை | பதிவு இலக்கம் / நாடு/வகை | வாகன எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | குபோட்டா போவீல் ட்ரக்டர் | 49/4314 ஜப்பான் 1995 | 01 |
| 02 | ட்ரக்டர் ட்ரேலர் (சிதைவுற்றது) | ஜப்பான் | 01 |

**எஸ்.ஏ.என்.பி.சுரவீர, பிரதேச சபையின் செயலாளர் மற்றும், கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் கருமங்கள், செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அலுவலர்**
**2023.04.24 ஆம் திகதி**
**கம்பஹா பிரதேச சபையில்**

## கள்ளுத் தவறனை குத்தகை விற்பனை – 2023/2024
## முந்தல் பிரதேச செயலக பிரிவு – புத்தளம் மாவட்டம்

2023 ஜூலை மாதம் 01 திகதி முதல் 2024 ஜூன் மாதம் 30 ம் திகதி வரையுமான காலப்பகுதிக்கு முந்தல் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் 2023.06.06 ம் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2023.04.28 ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானியினை பார்வையிடவும்.

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித்திகதியும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| முந்தல் | 01. முந்தல் | காலை - 11. 00<br>பி.ப. - 05.00 | பி.ப. - 2.00<br>இரவு - 08.00 | காலை - 10.30 மணி<br>2023 - 06 - 06 | 1000 |
| முந்தல் | 02. மதுரங்குளி | காலை - 11. 00<br>பி.ப. - 05.00 | பி.ப. - 2.00<br>இரவு - 08.00 | காலை - 10.30 மணி<br>2023 - 06 - 06 | 1000 |
| முந்தல் | 03. முக்குதொடுவாவ | காலை - 11. 00<br>பி.ப. - 05.00 | பி.ப. - 2.00<br>இரவு - 08.00 | காலை - 10.30 மணி<br>2023 - 06 - 06 | 1000 |
| முந்தல் | 04. உடப்பு | காலை - 11. 00<br>பி.ப. - 05.00 | பி.ப. - 2.00<br>இரவு - 08.00 | காலை - 10.30 மணி<br>2023 - 06 - 06 | 1000 |

**2023.04.19**

**எம்.எஸ்.பீ.டப்.டீஎம்.எஸ்.பீ.மல்வில,**
**உதவி பிரதேச செயலாளர்,**
**முந்தல்**

### நிகவெரட்டிய பிரதேச சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

நிகவெரட்டிய பிரதேச சபைக்கு தேவையான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உங்களது விலைமனுக்களை 2023.05.15ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் செயலாளர், பிரதேச சபை, நிகவெரட்டிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து ஒப்படைக்க முடியும்.

01. டிப்பர் வண்டிக்கு தேவையான 900x20 (16PR) அளவான டயர்
02. JCB இயந்திரத்திற்கு தேவையான 14x17.5 அளவான டயர்
03. வீதி விளக்கு சீரமைப்புக்கு தேவையான துணைக்கருவிகள் (1.44 mm வயர் 100m, 14w பல்ப், தம்லர் ஸ்விட்ச், 2Pin ஹோல்டர், பண்டல் கிளிப்)
04. நிறுவனத்தின் அச்சு இயந்திரத்திற்கு தேவையான டோனர் (canon NPG 59, canon 326, Toshiba 2507)
05. கொட்டவெஹர கொங்கிறீட் தயாரிப்பு நிலையத்திற்கு தேவையான நிர்மாணப் பொருட்கள் (4/3 கொங்கிறீட் கற்கள், 10 mm கம்பி, பைண்டின் கம்பி, ஆற்று மணல், சரளை)
06. LL – 6971 டிப்பர் வண்டியின் உட்புற மற்றும் வெளிப்புற சீரமைப்பு.
07. டிரக்டர் டேலர் சீரமைப்பு
08. 53 – 6116 கெப் வண்டியின் உட்புற மற்றும் வெளிப்புற சீரமைப்பு.
09. வாரச்சந்தை பகுதியின் கூரை மீது சூரிய சக்தி மின்சார கட்டமைப்பு ஒன்றை நிறுவுதல்.

**நிபந்தனைகள்**

1. குறித்த விபரக்குறிப்புகளுக்கு அமைய பொருட்களை வழங்கலை மேற்கொள்ளல் வேண்டும்
2. வாகன பழுதுபார்த்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் சூரிய சக்தி மின்சார கட்டமைப்புக்கான விலைமனுக்கள் குறித்த பரீட்சித்து பார்த்தலின் பின் வழங்குதல் வேண்டும்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**நிகவெரட்டிய.**
**037 2260275**

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
### உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

## Proxy Software Renewal (Sophos UTM ver.9)

செயற்றிட்டப் பெயர்: **Proxy Software Renewal (Sophos UTM ver.9)**
செயற்றிட்ட இல.: **IR/PAM/15/28/186/2023**
தேவைப்படும் விலைமனுப்பிணை: 1. பிணைத்தொகை: 260,000 ரூபா
2. செல்லுபடியாகும் கால எல்லை: 2023.09.16 ஆம் திகதி வரையும்.

1. ‘Proxy Software Renewal (Sophos UTM ver.9) என்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள் பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இலங்கையில் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட sophos Partner ஆக இருத்தல் வேண்டும்.
4. பின்வரும் தகவல் வழங்கப்படல் வேண்டும்.
   அ) கம்பனி பதிவு.
   ஆ) பெசேவ பதிவு
   இ) சட்டபூர்வமான நிலைப்பாடு (ஏக உரிமையாளர், பங்குடமை, கம்பனி போன்றன)
   ஈ) விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான கையொப்பதாரரின் நம்பகத்தன்மை (ஏற்புடையவாறான அற்றோணித்தத்துவம் அல்லது சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற கடிதம்)
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-05, ஜாவத்த, உள்நாட்டு இறைவரித் திணைக்கள தரவு மையத்திலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2590952) 2023.04.25 ஆம் திகதியிலிருந்து 2023.05.15 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள 15 ஆம் மாடியின் பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளையின் ஆணையாளரின் அலுவலகம் என்ற முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. பத்தாயிரம் ரூபா இலங்கை பணத்தை (10,000 இ.ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. 2023.05.16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்), பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவக் கிளை, 15 ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2023.08.16 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. இரண்டு இலட்சத்து அறுபதினாயிரம் (260,000 இல.ரூபா) இலங்கை ரூபாவில் மாத்திரம் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்ட விலைமனுக்கோரல் ஆவண படிவத்தின் பிரகாரம் வங்கி உத்தரவாத பாங்கில் மாத்திரம் விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023.09.16 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**கொழும்பு -02.**

## சிறு விளம்பரம்

**வேலைவாய்ப்பு**

312

**வெற்றிடங்கள்**
தொழில் நுட்பம்

எமது நிறுவனத்திற்கு டின்கர் பெயின்டர் தேவை. தங்குமிட வசதி களுடன். நுகேகொடை. 0777252876.
023627

## சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

(பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு)

எமது 2023.04.05 அன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்துக்கு அமைய அபிலாஷைகளை தெரிவிப்பதற்கான இறுதித் திகதி 26.04.2023 இலிருந்து 03.05.2023 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**தலைவர் - கொள்முதல் குழு,**
**சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்,**
**165, புத்தளம் வீதி,**
**சிலாபம் - 61000**

## கேள்விக்கான அழைப்பு

### மருத்துவம் அல்லாத உபகரணங்களை கொள்வனவு செய்தல்

சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு

### சுகாதார சேவைத் திணைக்களம்

### பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - மாத்தளை

மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக்குழுவின் தலைவரால் ஆரம்ப மருத்துவ சேவையை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் 2023ஆம் ஆண்டிற்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவம் அல்லாத உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | Non-Medical Equipment | QTY. |
|---|---|---|
| **No. 01** | | |
| 01 | Polythene Sealer (Drug Packing) | 31 |
| 02 | Photocopy Machine with Printer (Scan) | 14 |
| 03 | Laptop | 03 |
| 04 | UPS | 16 |
| 05 | Water Filter | 05 |
| 06 | AC Machine BTU 24000 | 04 |
| 07 | AC Machine BTU 18000 | 13 |
| 08 | Multi Media Projector | 02 |
| 09 | Refrigerator | 02 |
| **No. 02** | | |
| 01 | Office Table | 26 |
| 02 | Revolving Chair | 28 |
| 03 | Steel Cupboard | 18 |
| 04 | Hybrid Chair | 245 |
| 05 | Counter Chair | 05 |
| 06 | File Cupboard | 12 |
| 07 | Office Chair with Arm | 02 |
| 08 | Dining Table | 02 |
| 09 | Dining Chairs | 10 |
| 10 | Boiler | 01 |
| 11 | Water Tank (10000 L) | 01 |
| 12 | Locker | 10 |
| 13 | M/Net | 10 |
| **No. 03 Medical Equipment** | | |
| 01 | Cholesterol Strips | 25000 |
| 02 | BP Apparatus | 08 |
| 03 | Stethoscopes | 13 |
| 04 | Snellen Chart | 16 |
| 05 | Tuning Fork | 14 |
| 06 | Examination Bed | 09 |
| 07 | Pt Thermometer | 28 |
| 08 | Drug Counting Machine | 07 |
| 09 | ECG Machine (Single Channel) | 10 |
| 10 | Pulse Oxymeter | 19 |
| 11 | Sucker Machine | 16 |
| 12 | Multi Para Monitor (Ward) | 05 |
| 13 | Defribrilator | 06 |
| 14 | Endoscope Machine | 01 |
| 15 | Convex Probe | 01 |
| 16 | Slit Lamp | 02 |
| 17 | Infrared Lamp | 01 |
| 18 | ECG Machine (3 Channel) | 02 |
| 19 | Multipara Monitor (ICU) | 01 |
| 20 | PED Board for Occupational Therapy | 01 |
| 21 | CTG Machine | 02 |
| 22 | US Scanner | 01 |

01. கேள்விதாரர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் 2023.04.26 முதல் 2023.05.16 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை எம்.சீ. வீதி, மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெறும்.
02. கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்காக ஒரு பட்டியலுக்கு மீளளிக்கப்படாத ரூ. 5000.00 தொகையை மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் காசாளரிடம் காசாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வியுடன் முழுப் பெறுமதியில் 02% கேள்வி பிணையொன்றை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் மாத்தளை பெயரில் பெற்றுக்கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும். காசாக செலுத்துவதாயின் முழுப் பெறுமதியில் 01% பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் காசாளரிடம் காசாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விகள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியை முறையாகப் பூர்த்தி செய்து வேறுவேறாக உறைகளில் இட்டு சகலதையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் மருத்துவ உபகரணங்கள் அல்லாது மருத்துவமல்லாத உபகரணங்களை வழங்குதல் என்று குறிப்பிடுதல் வேண்டும்.
05. சரியாகப் பூர்த்தி செய்த கேள்விப் பத்திரங்களை 2023 மே 17ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். இதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு இத்தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள். 066-2222326/ 066-2222734.
06. கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் மருத்துவ உபகணரங்கள் 2023.05.09 மற்றும் மருத்துவம் அல்லாத உபகரணங்கள் 2023.05.10 மு.ப. 10.00 இற்கு மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**மாத்தளை.**

**2023.04.25ஆம் திகதி**
**எம்.சீ. வீதி, மாத்தளை.**

**ஆரோக்கியமயமாக்கள் - நிலைதகு அபிவிருத்தி**

## களனி பிரதேச சபை

### 2023ஆம் ஆண்டிற்கான வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசுகளை மேற்கொள்ளல்

2023ஆம் ஆண்டில் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர் ஒருவரைப் பதிவு செய்து கொள்வதற்காக பதிவு செய்யப் பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசுகளை மேற்கொள்ளல் நிபந்தனைகள்

01. இதற்காக ஆர்வமுள்ளவர்கள் பதிவுக் கட்டணத்தை செலுத்தி கீழ்க்காணப்படும் மாதிரிப்படிவத்தின் பிரகாரம் சுயமாகத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி 2023.05.04 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் செயலாளர், களனி பிரதேச சபை, புளுகஹ சந்தி, களனி என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகக் கட்டணத்தைச் செலுத்தி ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசுகளை மேற்கொள்ளல்களிற்காகப் பதிவு செய்து கொள்ளல் - 2023' எனக்குறிப்பிடுதல் வேண்டும்.
04. பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00 செலுத்துதல் வேண்டும்.
05. தபால் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதாயின் 'செயலாளர் களனி பிரதேச சபை' என வரையப்பட்ட காசோலை மூலம் மாத்திரம் செலுத்தலாம். காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலதிக விபரங்களிற்காக தொலைபேசி எண்: 011-2914110 மூலம் வழங்கல் அலுவலரை அழைக்கவும்.

2023.04.25.
**ஈ.எல். சுபசிங்ஹ,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்,**
**கருமங்கள் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அலுவலர்,**
**களனி பிரதேச சபை.**

## களனி பிரதேச சபை

**2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

**(வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசுகளை மேற்கொள்ளல்)**

01. வியாபாரம்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ..........................................................
02. தொலைபேசி இலக்கம்: ..........................................................
03. தொலைநகல் இலக்கம்: ..........................................................
04. மின்னஞ்சல் இலக்கம்: ..........................................................
05. வியாபாரத்தின் தன்மை: ..........................................................
06. அதிகாரம் பெற்ற அலுவலரின் பெயர்: .............................. (விசாரணைகளிற்காக)
07. அதிகாரம் பெற்ற அலுவலரின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்: ..........................................................
08. வியாபாரத்தின் பதிவு இலக்கம்: ..........................................
09. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..............................
10. வட் பதிவிலக்கம் (பெறுமதி சேர் வரி இலக்கம்) ..........................................................
11. செலுத்தப்பட்ட பதிவுக் கட்டணம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம்: ..........................................................

மேற்படி தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் இப் பெறுகையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் பூரணப்படுத்தப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்து கின்றேன்.

.................................................... ....................
**விணண்ப்பதாரரின் கையொப்பம்** திகதி

## கல்கமுவ பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டிற்கான வரவு – செலவு அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிப்பதற்கான பிரேரணைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பொது அறிவித்தல்

கல்கமுவ பிரதேச சபையினால் 2024ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கையானது இந் நாட்களில் மேற் கொள்ளப்படுவதுடன் அவ் அறிக்கையின் மூலதன மதிப்பீட்டு செலவினங்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்கக் கூடியவாறு கல்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் வசிக்கும் உங்களின் பிரேரணைகள் இருப்பின் அவற்றை எழுத்துருவில் 2023 ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக அல்லது தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் galgamuwaps@yahoo.com கல்கமுவ பிரதேச சபைக்குக் கிடைக்கக் கூடியவாறு 'செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஏ.பீ. நிமல் ரத்நாயக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, கல்கமுவ.**

**முகவரி** - **பிரதேச சபை, கல்கமுவ**
**தொலைபேசி இலக்கம்** - **037 2254081**
**மின்னஞ்சல் முகவரி** - **galgamuwaps@yahoo.com**

## நிறுவனத்தை கலைப்பு செய்தல் தொடர்பான அறிவித்தல் மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல்/ வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்

1939 ஆம் ஆண்டின் நிறுவனங்களை ஒடுக்குவது பற்றிய ஒழுங்குவிதிகளுடன் சேர்த்து வாசிக்கக்கூடிய 2007ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் 270 (அ) பிரிவின் கீழ் நிறுவனத்தை கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

அந்த்ரே போல் சிவராஜா,
இல. 94/1, 7 ஆம் ஒழுங்கை,
மஹல்வராவ, கொட்டாவ,
மஹரகம

வழக்கு இலக்கம் : 11/2023/CO
தன்மை : கலைப்பு செய்தல் (ஒடுக்குதல்)

**மனுதாரர்**

**எதிர்**

கம்ப்ளீட் இன்வெஸ்ட்மன்ட் (பிறைவட்) லிமிடட்
இல.60, காலி முகத்திடல் டெரஸ், கொழும்பு 03

**பிரதிவாதி**

மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்படி குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை ஒடுக்குவதற்காக 2023 பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடாத்தப்படும் மேல்மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2023 ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஒப்பம்:**
**தம்மிக்க ஜிமினிகே**
**மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி**
**இல. 16/G/9,**
**கொஸ்ஹேன வீதி,**
**மாலபே**

குறிப்பு :- அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023 ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

## கேள்வி விலைக் கோரல்

### சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**பாடசாலை சிறுவர்களுக்கு பயிற்சிப்புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை வழங்கும் செயற்றிட்டத்திற்காக கேள்வி விலைமனுக்களைக் கோரல்**

| | |
|---|---|
| **பெறுகை இலக்கம்** | **DSD/HO/03/ACC/38/Procu/23-xv** |
| பெறுகை விபரம் | 25 மாவட்டங்களின் 50,000 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகத்தொகுதிகள் 50,000ஐ வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பாடசாலைப் பயிற்சிப் புத்தகங்களை அச்சிட்டுக் கொள்வதற்காக தகைமையுள்ள வழங்குநர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்வி விலைக் கோரப்படுகின்றன. புத்தகத் தொகுதியொன்றின் அடக்கம் பின்வருமாறு |

| விபரம் | புத்தகங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | தனி ரூள் புத்தகங்கள் | கட்டமிடப்பட்ட புத்தகங்கள் |
| CR - 80 பக்கம் | 03 | - |
| CR - 120 பக்கம் | 02 | - |
| EX - 80 பக்கம் | - | 01 |
| EX - 120 பக்கம் | 07 | - |

மீளளிக்கப்படாத ரூபா 20,000/- இற்கான தொகையை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குக் காசாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை பெறுகைக் குழுவுக்குச் சமர்ப்பித்து 2023.04.25 அன்று மு.ப. 10.00 முதல் 2023.05.08 அன்று பி.ப. 1.00 வரை அலுவலக நேரங்களில் இதற்கான நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்களடங்கிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| **விலைமனு முன்னோடிக் கூட்டம் (Pre Bid Meetimg)** | **திகதி: 2023.05.03 நேரம் மு.ப. 10.00 திணைக்கள கேட்போர் கூடத்தில்** | |
| **கேள்விகள் மூடப்படும் மற்றும் திறக்கப்படும் நேரம் மற்றும் திகதி** | **திகதி 2023.05.08 நேரம் பி.ப. 2.00** | |
| தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக | பெறுகை இணைப்பு அதிகாரி | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், படிநிலை 01 4ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல<br>தொ. பே. 0112 889006/ 0112 873795<br>தொ. நகல் 011 2876604 |

**பணிப்பாளர் நாயகம்,**
**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,**
**4ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல.**

2023.04.25

## வெற்றிடங்கள்

கைத்தொழில் அமைச்சு

### கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

1. **சிரேஷ்ட சட்ட அதிகாரி**
2. **உள்ளக கணக்காய்வாளர்**
3. **சிரேஷ்ட சந்தைப்படுத்தல் அதிகாரி**
4 **சாரதி**

பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்: 2023-05-04
மேலதிக விபரங்களுக்கு 2023-04-21ஆம் திகதிய Daily News பத்திரிகையைப் பார்க்கவும்.

**பணிப்பாளர் நாயகம் / பி.நி.அ.**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.**

The Housewives' companion
Classifieds on
Daily News

Best way
to fulfil
your
Future Dreams

Marriage
Proposals

in the

Sunday Observer

# கிழக்கின் குரல்



# அம்பாறை மாவட்டத்தில் வெண்ணிற ஈ நோய்த் தாக்கம்

## தென்னை மரங்கள் அழிவடையும் நிலை



ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் வெண்ணிற ஈ நோய்த் தாக்கம் காரணமாக தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தென்னம் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக தென்னை மரங்களில் அத்துப் பூச்சியிலும் சிறியதான வெள்ளை நிறமுடைய பூச்சிகள் ஓலைகளின் உட்புறத்தில் தொற்றியிருந்தது கொண்டு நோய் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் ஓலைகள் கறுப்பு நிறமடைந்து படிப்படியாக தென்னை மரம் அழிந்து போகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நோய்த் தாக்கமானது உயர்ந்த மரங்களில் மட்டுமல்லாது இளந் தென்னம் பிள்ளைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இத்தொற்றானது, ஒலுவில், நிந்தவூர், அட்டப்பள்ளம், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில் மற்றும் தீகவாபி பகுதிகளில் காணப்படுகின்ற தென்னைகள் அனைத்தையும் பாதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு வகையான கிருமிநாசினிகள் மற்றும் மருந்துகள் தெளித்தும் இதுவரைக்கும் நோய்த் தாக்கம் குறையவில்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தென்னையில் ஏற்பட்டுள்ள தொற்று காரணமாக அதனால் கிடைத்து வந்த வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, விவசாய அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட தென்னை பயிர்ச் செய்கை அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி, வெண்ணிற ஈ நோயைக் கட்டுப்படுத்தி தருமாறு தென்னந் தோட்ட உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் விஷேட டெங்கு கட்டுப்பாடு செயற்பாடுகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் தலைமையில் விசேட டெங்கு கட்டுப்பாடு செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்ட பிரதேசங்களான கோட்டைமுனை, வெட்டுக்காடு, கொக்குவில் மற்றும் இருதயபுரம் ஆகிய பிரதேசங்களில் சுகாதார அதிகாரிகள், பொலிசார் மற்றும் மாநகர சபை ஊழியர்கள் உள்ளடங்கிய குழுவினரால் வீடு வீடாக சென்று பரிசோதிக்கப்பட்டதுடன் டெங்கு நுளம்பு உருவாகும் வண்ணம் பராமரிக்காமல் காணப்பட்ட வீடு மற்றும் வெற்றுக் காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சிகப்பு எச்சரிக்கை ஒட்டப்பட்டதுடன், சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது நீர் தேங்கியிருக்கும் கொள்கலன்கள், சிரட்டைகள், பிளாஸ்டிக் பொருட்கள் அகற்றப்பட்டதுடன் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு அதிகாரிகளினால் வழங்கப்பட்டது. மாவட்டத்தில் இருந்து டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என இதன் போது வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் பிரதேச வாசிகளிடம் கேட்டுக்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் மரக்கறி பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் குரங்குகள்

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் கமநலசேவைகள் நிலையத்திற்குட்பட்ட நாணல்சேனை, பண்வெட்டான், உப்புக்காச்சிமடு ஆகிய கரையோர மேட்டு நிலங்களில் செய்கை பண்ணிய பல்லின மரக்கறி பயிர்களை குரங்குகள் தினமும் உண்டும், நாசப்படுத்தியும் வருவதால் தோட்டச் செய்கையாளர்கள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர்.

இந்நிலையில் தற்போது அறுவடை செய்ய வேண்டிய நிலையில் உள்ள அவரை, வெண்டி, பயற்றை, போஞ்சி, தக்காளி, பயறு போன்ற உப உணவு மரக்கறி பயிர்கள் பெரும் விளைச்சல் கண்டுள்ள நிலையில் கண்டக்காடுகளில் வசிக்கும் குரங்குகள் கூட்டம் கூட்டமாக வந்து பயிர்களை நாசப்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



மண்டூர் 13ஆம் கொலணி விக்னேஸ்வரா மகாவித்தியாலய மாணவி ஜெ.திலோஜா கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய ரீதியில் 1ஆம் இடத்தைப்பெற்றுள்ளார். (படம்: வெல்லாவெளி தினகரன் நிருபர்)

## மட்டக்களப்பில் 9 மாடுகளை திருடிய மூவர் கைது

மட்டக்களப்பு குறூப் நிருபர்



காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் உள்ள மாடுகளை நீண்ட காலமாக களவாடிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி, ஒல்லிக்குளம் போன்ற இடங்களில் தனியாருக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமாக அறுத்து விற்பனை செய்து வந்த சந்தேக நபர்களையே காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவர்கள் களவாடி அறுப்பதற்காக மறைத்து வைத்திருந்த மூன்று மாடுகளையும் உயிருடன் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மாடுகளை அறுத்து அதன் மாமிசக் கழிவுகளை புதைத்து வைத்திருந்த இடத்தையும் பொலிஸார் அடையாளம் கண்டு மாட்டின் உரிமையாளரின் உதவியுடன் கழிவுகள் புதைக்கப்பட்டிருந்த இடங்களைத் தோண்டி பொலிஸார் மீட்டெடுத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## விளையாட்டு உத்தியோகத்தராக நியமனம்

அட்டாளைச்சேனை விசேட நிருபர்



அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தராக ஒலுவிலைச் சேர்ந்த ஏ இம்றுபாஸ்கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் செயற்படும் வகையில் ஏ. இம்றுபாஸ்கான் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளரினால் வருடாந்த இடமாற்றத் திட்டத்திற்கமைவாக அட்டாளைச்சேனை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.



சத்தியசாயி பாபாவின் ஆராதனா மகோற்சவத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று ஆலையடிவேம்பில் சாயி பாபாவின் தேர் ஊர்வலமானது நேற்று இடம்பெற்றது. (படம்: வாச்சிக்குடா விசேட நிருபர்)

## துரைவந்தியமேடு கிராமத்தில் நான்கு வயது சிறுமி உலக சாதனை

காரைதீவு குறூப் நிருபர்





அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய தனிமைப்படுத்தப்பட்டுள்ள துரைவந்தியமேடு குக்கிராமத்தைச் சேர்ந்த ஜனாசுகிர்தன் கிரண்யாஶ்ரீ எனும் நான்கு வயதுச் சிறுமி இரண்டு உலக சாதனைகளைப் படைத்துள்ளார்.

இவர் தனது இரண்டு கைகளாலும் AZ வரை குறுகிய நேரத்தில் எழுதி உலக சாதனையை படைத்துள்ளார். அவர் 2.38 நிமிடங்களில் இரு கரங்களினாலும் A Z வரை எழுதி இச் சாதனையை படைத்துள்ளார். அவரின் சாதனையை அவரே முறியடித்து 2 உலக சாதனைகளை படைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. செல்வி. கிரண்யாஶ்ரீ முதலாவது சாதனை AZ =3.30 நிமிடங்களில் நிகழ்த்தியிருந்தார். தற்போது இரண்டாவது சாதனை AZ=2.38 நிமிடங்களில் நிகழ்த்தியுள்ளார். இவை இந்தியாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இரண்டு உலக சாதனை நிறுவனங்கள் மூலம் நிகழ்த்தப்பட்டது. அதற்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குடும்பத்தில் ஒரே மகளான இவரின் தந்தை கலைஞராவார். தாய் ஒரு தாதிய உத்தியோகத்தராவார். அவரின் தந்தை உலகில் மிகச் சிறிய சிவலிங்கத்தை மரத்தில் செதுக்கி உலக சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நோன்பு பெருநாள் தினத்தில் நிந்தவூரில் வீடு கையளிப்பு

துறைநீலாவணை நிருபர்



அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு 'வாழ்வில் வசந்தம்' வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பகுதி அளவான 9 ஆவது வீடு கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் தலைவர் ஐ.எம். நிஸ்மி தலைமையில் நிந்தவூர் 23 ஆம் பிரிவு அட்டப்பள்ளம் பிரதேசத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அகில இலங்கை ஜமியத்துல் உலமா சபையின் இணைப்பாளர் மௌலவி ஏ. எச். மின்ஹாஜ் (முப்தி) கலந்து கொண்டு பயனாளியிடம் வீட்டை கையளித்து வைத்தார்.

நிந்தவூரை சேர்ந்த புகழ்பெற்ற கல்விமான் மர்ஹூம் சீ ஓ லெஸ்தகீர் குடும்ப நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புடன் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய பயனாளி ஒருவருக்கே இந்த பகுதி அளவான வீடு பூர்த்தி செய்து வழங்கி வைக்கப்பட்டது.

## கல்முனையில் சொகுசு கார் மோட்டார் சைக்கிள் விபத்து

### மூவர் படுகாயம், ஒருவரின் நிலை கவலைக்கிடம்

கல்முனை குறூப் நிருபர்

கல்முனையில் சொகுசு காருடன் மோட்டார் சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.55 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,...

கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியில் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சொகுசு கார் ஒன்றுடன் மோட்டார் சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் மூவரும் பலத்த காயங்களுடன் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இதில் ஒரு இளைஞனின் நிலை கவலைக்கிடமான நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பில் கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சேவை நலன் பாராட்டு விழா

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்



அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற, அலுவலக உதவியாளர் எஸ்.குணசேகரனின் பணியைப் பாராட்டி

கௌரவிக்கும் சேவை நலன் பாராட்டு விழா, வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.ஜீ.பஸ்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஏ.எஸ். அஹமட் கியாஸ், எம்.எம்.சித்தி பாத்திமா, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## மட்டக்களப்பு நகர வீதியில் ஆணின் சடலம் மீட்பு

வெல்லாவெளி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு நகர் முனைவீதி 2ஆம் குறுக்கு வீதியில் உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்படாத நிலையில் ஆண் ஒருவர் நேற்று திங்கட்கிழமை (24) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் சம்பவதினமான நேற்றுக் காலை சடலம் ஒன்று இருப்பதை கண்டு பொதுமக்கள் பொலிசாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிசார் விசாரணையை மேற்கொண்டு வருவதுடன் குறித்த நபர் நகர் பகுதியில் பிச்சை எடுத்து வந்துள்ளதாகவும், இவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

# அயர்லாந்து அணி வலுவான ஆட்டம்



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் துடுப்பெடுத்தாடும் அயர்லாந்து அணி முதல் இன்னிங்ஸில் வலுவான ஓட்டங்களை பெற்றுள்ளது.

காலியில் நேற்று (24) ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் டெஸ்டில் ஆடிய அதே அணியுடன் களமிறங்கியது. எனினும் முதல் டெஸ்டில் தடுமாற்றம் கண்ட அயர்லாந்து அணியில் மூன்று மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. முன்னணி துடுப்பாட்ட வீரர் போல் ஸ்டர்லிங் அணிக்கு திரும்பியதோடு மத்தியூ ஹம்ப்ரேஸ் தனது கன்னி டெஸ்டில் களமிறங்கினார். கிரஹம் ஹியுமினும் அணிக்கு அழைக்கப்பட்டார்.

இந்நிலையில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த அயர்லாந்து அணி 12 ஓட்டங்களுக்கே முதல் விக்கெட்டை இழந்ததோடு 89 ஓட்டங்களில் முதல் மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரிய ஆரம்பத்திலேயே இரண்டு விக்கெட்டுகளை சாய்த்து எதிரணிக்கு நெருக்கடி கொடுத்தார்.

எனினும் நான்காவது விக்கெட்டுக்கு இணைந்த அணித் தலைவர் அன்டி பெல்பிரினி மற்றும் ஸ்டர்லிங் 115 ஓட்டங்களை பகிர்ந்துகொண்ட நிலையில் 74 ஓட்டங்களை பெற்றிருந்த ஸ்டர்லிங் உபாதை காரணமாக அரங்கு திரும்பினார். தொடர்ந்து பெல்பிரினி ஐந்து ஓட்டங்களால் சதத்தை தவிறவிட்டார். 163 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 14 பௌண்டரிகளுடன் 95 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் ஜோடி சேர்ந்த விக்கெட் காப்பாளர் லூகர் டியுகர் மற்றும் கேர்டிஸ் கெம்பர் நிதானமாக ஆடி அயர்லாந்து அணியை மேலும் வலுப்பெறச் செய்தனர். இருவரும் முதல் நாள் ஆட்டநேரம் முடியும் வரை களத்தில் இருந்து பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 87 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

இதில் தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தை நெருங்கி இருக்கும் டியுகர் 78 ஓட்டங்களுடனும் கெம்பர் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் அயர்லாந்து அணி 90 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 319 ஓட்டங்களை பெற்றுள்ளது. முதல் நாள் ஆட்டத்தில் ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுத்திய இலங்கை பந்து வீச்சாளர்கள் பின்னர் தடுமாற்றம் கண்டனர்.

இன்று போட்டியின் இரண்டாவது நாளாகும்.

## ஆசிய கிண்ண போட்டி

# இந்தியாவின் ஆட்டங்களை பொது இடத்தில் நடத்த பாக். பரிந்துரை




எதிர்வரும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை கலப்பு வடிவத்தில் நடத்த ஆசிய கிரிக்கெட் கவுன்சிலுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பரிந்துரைத்துள்ளது. இதன்படி பாகிஸ்தான் தனது ஆசிய கிண்ணப் போட்டிகளை சொந்த மைதானத்தில் ஆடும் என்பதோடு இந்தியா தனது போட்டிகளை பொது இடத்தில் ஆடும் என்று பாக். கிரிக்கெட் சபை தலைவர் நஜாம் செதி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் பதற்றம் காரணமாக இந்திய அணி பாக். செல்வதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நிராகரித்துள்ளது.

எனினும் தொடரின் பெரும்பகுதியை பாகிஸ்தானில் நடத்த அந்நாட்டு கிரிக்கெட் சபை எதிர்பார்த்துள்ளது. இந்நிலையில் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு சபைக்கான மாநாட்டில் பங்கேற்க பாக். வெளியுறவு அமைச்சர் பிலவால் பூட்டோ சர்தாரி அடுத்த மாதம் கோவா பயணிக்க உள்ளார். இந்தப் பயணத்தில் இதற்கு தீர்வு கிடைக்கும் என்று செதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

“ஆசிய கிண்ணத்தில் அனைத்து இந்திய போட்டிகளையும் பொது இடத்திற்கு மாற்ற பாகிஸ்தான் தீர்மானித்தால், இந்தியாவில் இந்த ஆண்டு ஒக்டோபர், நவம்பரில் நடைபெறவுள்ள 50 ஓவர் உலகக் கிண்ணத்தில் இதே கலப்பு முறையை இந்தியா பயன்படுத்த வேண்டும்” என்று செதி செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

“அனைத்தும் பரஸ்பரமான முறையில் இருக்க வேண்டும் என்பது தான் எமது நிலைப்பாடு. ஆம், கடந்த காலங்களில் பாகிஸ்தானில் பாதுகாப்புப் பிரச்சினை இருந்தது. ஆனால் தற்போது அப்படியான பிரச்சினை இல்லை. எனவே, பாகிஸ்தானில் விளையாடாமல் இருப்பதற்கு இந்தியா கூறும் நியாயம் தான் என்ன?” என்று செதி கேள்வி எழுப்பினார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜேய் ஷாஹ் தலைமையிலான ஆசிய கிரிக்கெட் கவுன்சில் பாக். கிரிக்கெட் சபையின் இந்த கலப்பு வடிவத்திற்கு இன்னும் பதிலளிக்கவில்லை.

ஆசிய கிண்ண போட்டியில் இம்முறை ஆறு அணிகள் பங்கேற்கின்றன. பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷுடன் தகுதிகாண் போட்டி மூலம் மேலும் ஓர் அணி தேர்வு செய்யப்படவுள்ளது. இம்முறை ஆசிய கிண்ணப் போட்டிகள் உலகக் கிண்ணத்திற்கு முன்னதாக வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும்.

## கெனடி அணி வெற்றி



காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட ‘சுகா–விக்கி’ ஞாபகார்த்த கிண்ண கிரிக்கெட் போட்டியில் களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

32 கழகங்கள் பங்கேற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டம் விபுலானந்தா மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (22) நடைபெற்றது. இதில் பொத்துவில் ப்ரீலயன்ஸ் அணியையே கெனடி அணி தோற்கடித்தது.

இந்தச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு 30,000 ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடத்தை பெற்ற அணிக்கு 20,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

## உலக பாடசாலை செஸ்: ரித்மித தெஹஸ் சம்பியன்



கிரேக்கத்தில் நடைபெற்ற உலக பாடசாலை செஸ் போட்டியில் 9 வயதுக்கு உட்பட்ட கனிஷ்ட தங்கப் பதக்கத்தை கொழும்பு ஆனந்தா கல்லூரியின் ரித்மித தெஹஸ் கிரின்கொட வென்றுள்ளார்.

கிரேக்கத்தின் ரோட்ஸில் கடந்த ஏப்ரல் 14 தொடக்கம் 22ஆம் திகதி வரை நடைபெற்ற இந்தப் போட்டிக்கு 23 நாடுகளின் 61 பாடசாலை செஸ் வீரர்கள் பங்கேற்றனர். ரித்மித தெஹஸ் தாம் பங்கேற்ற 9 சுற்றுகளில் 7.5 புள்ளிகளைப் பெற்று 9 வயதுக்கு உட்பட்ட கனிஷ்ட பிரிவில் சம்பியன் பட்டத்தை வென்றார். இந்தப் போட்டியில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை கசகஸ்தான் நாட்டு வீரர்கள் வென்றனர்.

## புர்கினா கிராமத்தின் மீது தாக்குதல்: 60 பேர் பலி



வடக்கு புர்கினா பாசோ கிராமம் ஒன்றில் இராணுவ உடையில் வந்த ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் சுமார் 60 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மாலி நாட்டு எல்லைக்கு அருகில் உள்ள கார்மா கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (21) இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஜிஹாதிக்கள் மீதே இந்தத் தாக்குதல் தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மோட்டர் சைக்கிள்கள் மற்றும் பிக் அப் வண்டிகளில் 100க்கும் அதிகமானவர்கள் வந்து தாக்குதல் நடத்தியதாக உயிர் தப்பியவர்கள் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

இராணுவ உடையில் வந்த அவர்கள் பல ஆண்கள் மற்றும் சிறுவர்களைக் கொன்றதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

2012 இல் மாலியின் துராக் பிரிவினைவாதிகளின் எழுச்சி ஒன்றை கடும்போக்குக் குழுக்கள் கைப்பற்றியதை அடுத்தே பிராந்தியத்தில் பதற்றம் வெடித்தது. புர்கினா பாசோவில் தற்போது 40 வீதமாக பகுதி ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாக நம்பப்படுகிறது.

## லண்டனில் நிதிச்சந்தை உரையாடல்

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான நிதிச் சந்தை தொடர்பான உரையாடல் லண்டன் நகரில் நடைபெற்றுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கு பின்னர் நடைபெற்றுள்ள இந்த உரையாடலை இரு தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

இரண்டு நாடுகளதும் நிதித்துறை நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளது பங்கேற்புடன் இடம்பெற்றுள்ள இந்த உரையாடலின் போது நிதித்துறை தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

## சர்வதேச செய்திகள்

# உலக இராணுவச் செலவு வரலாறு காணாத உச்சம்



உலகில் இராணுவ செலவுகள் 2022 ஆம் ஆண்டில் 2.24 டிரில்லியன் டொலர்களாக எப்போதும் இல்லாத அளவு அதிகரித்திருப்பதோடு உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து ஐரோப்பாவில் இராணுவ செலவு வேகமாக உயர்ந்திருப்பதாக முன்னணி பாதுகாப்பு ஆய்வு நிறுவனமான ஸ்டொக்ஹொம் சர்வதேச அமைதி ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

உலகில் இராணுவ செலவுகள் தொடர்ச்சியாக எட்டாவது ஆண்டாகவும் அதிகரித்திருப்பதாக அந்த நிறுவனம் நேற்று (24) வெளியிட்ட ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பாவில் 13 வீத அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதோடு அது குறைந்தது 30 ஆண்டுகளில் இல்லாத வேகமான அதிகரிப்பாக உள்ளது. இதில் அதிகமான செலவுகள் உக்ரைன் மற்றும் ரஷ்ய போருடன் தொடர்புபட்டது என்பதோடு ரஷ்ய அச்சுறுத்தல் காரணமாகவும் இராணுவ செலவுகள் அதிகரித்திருப்பதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இராணுவ செலவு 34 வீதம் அதிகரித்திருப்பதோடு அது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.2 வீத அதிகரிப்பாகும்.

உலகில் அதிக இராணுவ செலவை கொண்ட நாடாக அமெரிக்க தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அந்த நாடு 2022 இல் 0.7 வீத அதிகரிப்புடன் 877 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. இது மொத்த உலக இராணுவ செலவில் 39 வீதமாக உள்ளது.

இரண்டாவது இடத்தில் நீடிக்கும் சீனா 2022 இல் 292 பில்லியன் டொலர்களை செலவிட்டிருப்பதோடு 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.2 வீத அதிகரிப்பாக உள்ளது. அந்த நாடு 28 ஆண்டுகளாக தொடர்ந்து இராணுவ செலவுகளை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் ரஷ்யாவின் இராணுவச் செலவுகள் 2022இல் 9.2 வீதம் அதிகரித்து 86.4 பில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளது.

## சூடானில் வெளியேற்ற முயற்சிகள் தீவிரம்



சூடானில் சண்டை தீவிரமடைந்திருப்பதால் வெளிநாட்டு அரசாங்கங்கள் தங்களது குடிமக்களை அங்கிருந்து வெளியேற்ற அவசரமாகச் செயல்படுகின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகள் அவற்றின் இராஜதந்திர அதிகாரிகளை ஏற்கனவே வெளியேற்றிவிட்டன. ஜப்பான் சூடானில் உள்ள சுமார் 60 பேரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. கார்டும் நகரில் சண்டை தீவிரமடைந்திருப்பதால், அங்கிருந்து வெளியேற முயன்ற பிரான்ஸ் குடிமக்கள் சிரமத்தை எதிர்நோக்கினர். அதில் ஒருவர் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாலி, ஜெர்மனி, கிரீஸ், தென் கொரியா ஆகிய நாடுகளும் தங்களது குடிமக்களை சூடானிலிருந்து வெளியேற்றத் திட்டமிடுகின்றன. ஸ்பெயின் சுமார் 10 பேரை வெளியேற்றி இருப்பதாகத் தெரிவித்தது.

ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 70 பேர் அதில் அடங்குவர். மலேசியாவைச் சேர்ந்த விமானம் அங்கு தரையிறங்குவதற்கு ஒப்புதல் கேட்டுக் காத்துள்ளது. சூடானில் இம்மாதம் 15ஆம் திகதி இராணுவ தலைவர் அப்துல் பத்தா அல் புர்ஹானின் படைகளுக்கும் அவரின் முன்னாள் துணை தலைவர் முகமது ஹம்தன் டாக்லோவின் துணைப் படைக்கும் இடையே மோதல் வெடித்தது.

## கோடைக்கு முன்னரே ஆசியாவில் அதீத வெப்பம்



கோடை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னரே ஆசியாவின் பல பகுதிகளை அதீத வெப்பம் வாட்டுகிறது.

கடந்த சனியன்று (22) தாய்லந்துத் தலைநகர் பங்கொக்கில் வெப்பநிலை 42 டிகிரி செல்சியஸை எட்டியது. ஈரத்தன்மையைக் கருத்தில் கொண்டால் அங்கு 54 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை உயர்ந்திருக்கலாம் என்று கூறப்பட்டது.

வெப்பத்தால் உடல்நலம் பாதிக்கப்படாமல் இருப்பதற்குக் குடியிருப்பாளர்கள் உட்புறங்களிலேயே இருக்கும்படி அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். மலேசியாவில் தொடர்ச்சியாக 3 தினங்களுக்கு வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸாகப் பதிவானது. அதை வெப்ப அலை என மலேசிய சுகாதாரத் துறை வகைப்படுத்தியுள்ளது.

மக்களை நிறைய தண்ணீர் அருந்துமாறும் வெளிர் நிற, மெல்லிய ஆடைகளை அணியும்படியும் அதிகாரிகள் வலியுறுத்தினர்.

இந்தக் காலகட்டத்தில் கோப்பி, தேநீர் போன்ற பானங்களை அல்லது மதுபானங்களைக் அருந்துவதைக் குறைத்துக்கொள்ளுமாறு அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.